திணைமொழி ஐம்பது

அம்சவேணி பெரியண்ணன் உரை



திணைமொழி ஐம்பது

அம்சவேணி பெரியண்ணன் உரை

அம்சவேணி பெரியண்ணன் M.A.,

வனிதா பதிப்பகம்

11, நானா தெரு, தியாகராய நகர்,
சென்னை-600 017. ☎ 044-42070663

திணைமொழி ஐம்பது அம்சவேணி பெரியண்ணன் உரை ❒ பதிப்பு 2019 ❒ பக்கங்கள்: 64 ❒ வெளியீடு: வனிதா பதிப்பகம், எண். 11, நானா தெரு, தி.நகர், சென்னை-17. ❒ தொலைபேசி:42070663 ❒ ஒளி அச்சு: லதா கம்பியூட்டர், சென்னை. ❒ அச்சிட்டோர்: பத்மாவதி ஆப்செட், சென்னை.

விலை: ரூ.60.00

பதிப்பாளர்: **டாக்டர்.பெ.மயிலவேலன்,**
M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

எச்சரிக்கை

காப்பிரைட் சட்டத்தின்கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது; தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர்.பெ.மயிலவேலன், M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

Copyright Warning: No part of this book may be reproduce or transmitted in any form or by any means electronic or mechanical including photocopying or recording or by any information storage and retrieval system without permission in writing from **Dr.P.MAILAVELAN, M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D., Chennai.**

Any violations of these conditions, legal action will be initiated in civil and criminal proceedings under the Copyright Act 1957.

THINAI MOZHI IMPATHU HAMSAVENI PERIANNAN URAI ❒ Edition: 2019 ❒ Pages: 64 ❒ Published by: Vanitha Pathippagam, No.11, Nana Street, Pondy Bazaar, T.Nagar, Chennai-17 ❒ Phone: 42070663 ❒ Typeset: Latha Computer, Chennai ❒ Printed at: Padmavathi Offset, Chennai.

Price: **Rs.60.00**

Publisher: Dr.P.MAILAVELAN,
M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

பொருளடக்கம்

1. குறிஞ்சி 5

2. பாலை 16

3. முல்லை 28

4. மருதம் 38

5. நெய்தல் 50

THINAI MOZHI AIMPATHU [illegible] PURIANNAN URAI
☐ Edition: [illegible] ☐ Pages: [illegible] ☐ Published by: Vanitha Pathippagam, No. 11, [illegible] Street, [illegible] T.Nagar, Chennai-17 ☐ Phone: 4207068[illegible] ☐ [illegible] Computer, Chennai ☐ Printed at: Padmavathi [illegible], Chennai

Price: Rs.[illegible]

Publisher: Dr.P.MAILAVELAN.

திணைமொழி ஐம்பது

பெரியண்ணன் உரை

குறிஞ்சி

இரவில் வரவேண்டாம்

1. புகழ்மிகு சாந்தெறிந்து புல்எரியூட்டி
புகைகொடுக்கப் பெற்ற புலவோர்-துகழ்பொழியும்
வானுயர் வெற்ப! இரவில் வரல்வேண்டா
யானை உடைய சுரம்.

விளக்கவுரை

மலையும், மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம். குறிஞ்சி நிலத்து மலைகளில் சந்தன மரங்கள் காடாக வளர்ந்திருக்கின்றன. மலைச் சாரலில் திணை முதலானவைகளை பயிரிட சந்தன மரங்களை வெட்டி எரிப்பார்கள். அந்த சந்தன மரங்களின் நறுமணப் புகை வான் வழியே சென்று வானுலக தேவர்களை மகிழ்விக்கும். தேவர்கள் பூந்தூறல் மழைத் துளிகளை பொழிவர். இத்தகைய வளமிக்க, சிறப்புமிக்க மலைகள் திகழும் மலைநாட்டுத் தலைவனைப் பார்த்து தோழி கூறுகிறாள். நீர் எம் தலைவியைப் பார்க்க இரவுப் பொழுதில் வரவேண்டாம். இரவில் வரும்போது காட்டுப்பாதையில் ஆபத்துகள் அதிகம். அது யானைகள் திரியும் கொடிய

வனப் பகுதி என்று எச்சரிக்கிறாள் தோழி. பகலில் வந்து திருமணம் முடியுங்கள். களவொழுக்கம் வேண்டாம் என்றும் தலைவனுக்கு குறிப்பால் உணர்த்துவதாக இப் பாடல் புனையப்பட்டுள்ளது.

திருமணம்தான் தலைவிக்கு பாதுகாப்பானது. களவொழுக்கத்தால் பல இடையூறுகள் நேரலாம். அல்லது தலைவிக்கு ஏமாற்றம் தரும் செயல்கள் நடக்கலாம் என்பதை யெல்லாம் யோசனை செய்த தோழி தலைவனிடம் இவ்வாறு கூறினாள் எனலாம்.

அருஞ்சொற்பொருள்

சாந்து-சந்தன மரம். எறிந்து-வெட்டி. புல்-புதர். எரி ஊட்டு-கொளுத்தி. புலவோர்-தேவர். துகள்-பூந்தாது போன்ற மழைத் துளி. வெற்ப-மலையகத் தலைவர். கரம்-காட்டுவழி.

தலைவியை காண வழியில்லை

2. **கணமுகை கைஎனக் காந்தள்கவின**
மணமுகை என்றெண்ணி மந்தி கொண்டாடும்
விறல்மலைநாட! வரஅரிதாம் கொல்லோ
புனமும் அடங்கினகாப்பு.

விளக்கவுரை

பருத்த மலர் மொட்டுகள் காந்தள் மலர்ச் செடி களில் கைகள் போலத் தோற்றமளிக்கின்றன. மணமுகை என்று நினைத்து ஆண் குரங்கு அதை கொண்டாடும் (அந்த காந்தள் மலர் மொட்டுக்களை) மணப் பந்தலில் வைக்கப் பெறும் முளைப் பாலிகை என்று நினைத்து பெண் குரங்குகள் அவற்றைப் பறித்து விளையாடும். வெற்றி புகழ்மிக்க வீரனே. மலையகத் தலைவா... தினைப்புனத்தில் அறுவடையும் முடிந்து விட்டது. ஆகவே, விளைந்த கதிர்களை காவல் வேலையும்

முடிந்து போய்விட்டது. தினைப் புனக் காவலுக்கு தலைவி இனி வரமாட்டாள். நீ தலைவியைக் காணும் சாக்கில் அங்கு வருதலும் முடியாததாகி விட்டது. ஆகவே, முறைப்படி வந்து மணமுடித்துக் கொள்வதே இப்போது நீ செய்யும் வேலை என்று தலைவனுக்குத் தோழி குறிப்பாக உணர்த்துவதாக இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

களவொழுக்கத்திற்கு வாய்ப்பு இல்லை என்கிற போது முறைப்படி திருமணம் முடிப்பது ஒன்றே சரியான வழியாக அக்காலத்தில் இருந்திருக்கிறது. களவு, மணம், கற்பு மணம் ஆகிய இரண்டும் அக்காலத்தி லிருந்து இக்காலம் வரை தமிழகத்தில் இருந்து வருவதை அறிகிறோம். ஐந்திணை ஐம்பது இலக்கியத்தை தந்த கண்ணர் சேந்தனார் அவர்களும் தலைவன். தலைவி சம்பந்தப்பட்ட விஷயங்களையே கூறுகிறார். மனித சமுதாயத்திற்கு இதனை வாசிப்பதால் என்ன பயன்? என்று சிந்திக்கும்போது பண்டைத் தமிழரின் காதல் முறையை அறிகிறோம்.

அதோடு கற்பனை வர்ணனைகளை சிந்திக்கும் போது, நம் மனம் புதிய உலகத்தில் பிரவேசிப்பது போல் ஆகிறது. பல்வேறு துன்பங்களும் சஞ்சலங்களும் நிறைந்த இந்த உலக வாழ்க்கையில் மனதை கற்பனை வர்ணனைகளில் செலுத்தும்போது மனதிற்கு ஒருவித மான ஓய்வு கிடைக்கிறது. மனதிற்கு ஓய்வு கொடுப்பதன் மூலம் மனம் வலுப் பெறுகிறது. வலிமை பெற்ற மனத் தால் நம் செயல்கள் எதுவாக இருந்தாலும் சிறப்பாக செய்யும் ஆற்றல் உண்டாகிறது. ஆகவே, திணைமொழி ஐம்பது இலக்கியம் மனித சமுதாயத்திற்கு பயன்படும் விதத்திலேயே தரப்பட்டிருக்கிறது எனலாம். இச்சிந்தனை களைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அருஞ்சொற்பொருள்

கணமுகை-திரட்சியான மொட்டு. கவின்-விளங்க. மணமுகை-மணப்பாலிகை (திருமணங்களில் வைக்கப்படும் மங்கலப் பொருள்களில் பாலிகையும் ஒன்று). மந்தி-பெண் குரங்கு. கொண்டாடு-விளையாடும். விறல்-வலிமை, வெற்றி. அரிது-இயலாதது. புனம்-தினைவயல். அடங்கின-முடிந்தது. காப்பு-காவல். கொல்லோ-அசை.

அந்த நாள் போல் இல்லையே...

3. ஓங்கல் இறுவரைமேல் காந்தள் கடிகவினப்
பாம்பென ஓடிஉரும் இடிப்பக் கண்டிரங்கும்
பூங்குன்ற நாடன் புணர்ந்த அந்நாள் போலா
ஈங்கு நெகிழ்ந்த வளை.

விளக்கவுரை

குறிஞ்சி மலர் பூக்கும் குன்றுடைய மலை நாட்டுத் தலைவன் கூடிகளித்து இன்பமூட்டிய அந்த நாள்போல் இன்று இல்லை. தலைவரின் பிரிவு காணாமல் தலைவி யின் உடல் இளைத்தது. கைவளையயல்கள் கழன்று விழுகின்றன என்று தோழி தலைவியின் நிலையை கூறுகிறாள். ஓங்கி வளர்ந்த மலைச்சாரலில் காந்தள் மலர்கள் பூத்து குலுங்குகின்றன. மேகம் தவழும் வானில் பாம்பு போல மின்னல் தோன்றுகிறது. அதனூடே இடி வேறு. இதனை யெல்லாம் கண்டு மகிழ காதலர்கள் இல்லையே என்று துணையை பிரிந்து வாடும் குறிஞ்சி நிலத்தை சேர்ந்த தலைவன் இல்லாததால் இந்த துன்பம் நேர்ந்திருக்கிறது என்று தோழி சொல்வதாக கற்பனை நயத்துடன் புலவர் கூறியிருக்கிறார்.

தலைவரின் பிரிவு, வளையயல் கழன்றது. தலைவியின் உடல் இளைத்தது இந்த செய்திகளே திரும்ப, திரும்ப பாடலில் வருகின்றன. இதனால், என்ன பயன்? என்ற

சிந்தனை எழுகிறது நாமும் திரும்ப, திரும்ப நினைவு படுத்துகிறோம். வாழ்க்கை என்னும் சூறாவளியில் சிக்கி தவிப்பவர்களுக்கு திணைமொழி ஐம்பது என்பது ஒரு இளைப்பாறுதல், நம் மனதை துன்பத்திலிருந்து திசை திருப்பி தெய்வீக கற்பனையில் ஆழ்த்தும் தமிழ் இலக் கியம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

அருஞ்சொற்பொருள்

ஓங்கல்-உயர்ந்த. இறுவரை-அடிமலை. கடி-அழகு. கவின்-விளங்க. உரும்-இடி. இரங்கும்-வருந்தும். புணர்ந்த-கூடி மகிழ்ந்த. நெகிழ்ந்த-கழன்ற. வளை-கைவளையல்கள்.

இன்றாவது தலைவன் வருவானா?

4. ஏனல் இடந்திட்ட ஈர்மணி கொண்டு எல்லிடைக்
கானவர் மக்கள் கனலெனக் கைகாய்த்தும்
வானுயர் வெற்பன் வருவான்கொல் என்தோழி
மேனி பசப்புக்கெட.

விளக்கவுரை

என் தலைவியின் உடலில் பசலை படர்ந்து வருந்துகிறாள். இன்றாவது தலைவன் வருவானா? தெரியவில்லையே. திணைப்புனைக் காவலும் இல்லாமல் போயிற்று. அதனால் தலைவன், தலைவி சந்திக்க வாய்ப்பும் இல்லாமல் போனதே என்று தோழி வருந்துகிறாள். திணை அறுவடையானதும் நிலத்தை உழுது போட்டிருக்கிறார்கள். அடுத்த பட்டம் விதைப்பதற்காக அப்படி உழுத நிலத்தில் கிடக்கின்ற குளிர்ந்த ரத்தினக் கற்களை நெருப்பென்று நினைத்து இரவு நேரத்தில் அதன் மீது கைகளை நீட்டி குளிர் காய்வார்கள். இத்தகைய வளம்மிக்க, வான் உயர்ந்த மலைகளையுடைய குறிஞ்சி நிலத் தலைவன் எப்படி வருவான்? தலைவியின் பசலை எப்போது தீரும்? என்ற

கவலையில் தோழி புலம்புவதாக இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

ரத்தினக் கற்களை நெருப்பு என்று நினைத்து குளிர்காய்வார்களாம். புலவரின் கற்பனைத் திறனை பாருங்கள். இந்த மண்ணுலகம் என்னும் நரகத்தில் மனிதர்கள் பணத்திற்காகவும், வசதிக்காகவும் படாத பாடுபடுகிறார்கள். மனதை அலைபாய விடுகிறார்கள். மனமும் சலித்து, உடலும் சலித்து களைப்படை கிறார்கள். இந்த கற்பனைகளைப் படித்தால் மனமும், உடலும் இளைப்பாறுதலைப் பெறும். பண்டை காலத்து காதல் நிலைகளும் தெரிய வரும். இச்சிந்தனைகளோடு திணைமொழி ஐம்பதை வாசகர்கள் படித்து பயன் பெறவேண்டும்.

அருஞ்சொற்பொருள்

ஏனல்-திணை. இடந்திட்ட-உழுதிட்ட. ஈர்-குளிர்ந்த. மணி-மணிக் கற்கள். எல்இடை-இரவில். கானவர்-குறவர். கனல்-தீ. காய்த்தும்-காயும். வெற்பன்-குறிஞ்சித் தலைவன். மேனி-உடம்பு. பசப்பு கெட-பசலை நீங்க. (பசலை என்பது... காதல் நோயால் தவிப்பார்கள் உடல் நிறம் மாறும். தேமல் படரும். இதையே பசப்பு, பசலை என்பர். இதைக் கொண்டே காதல் நோய் கொண்டவரை அடையாளம் காண்பர்.)

காவல் அதிகம்... காண வரவேண்டாம்...

5. விரைகமழ் சாரல் விளைபுனம் காப்பார்
வரையிடை வாரல்மின்ஐய!-உரைகடியர்
வில்லினர் வேலர் விரைந்துசெல் அம்பினர்
கல்இடை வாழ்நர் எமர்.

விளக்கவுரை

குறிஞ்சி நிலத் தலைவனை நோக்கி தோழி கூறுகி றாள்... தலைவியை காண நீ வரவேண்டாம். ஏனெனில்

வாசமலர் பூப்பதாலும், அதில் சந்தன மரங்கள் நிறைந் திருப்பதாலும், மிகுந்த நறுமணம் வீசிக் கொண்டிருக் கும் மலைச்சாரலில் உள்ள தினைவிளையும் கெடல்லை களைக் காவல் செய்யும் இம்மலையில் வாழும் எம் இனத்தவரான வேடுவர்கள் கொடிய சொற்களைப் பேசுவார்கள். வில்லேந்தியிருப்பார்கள் வேல் கொண் டிருப்பார்கள். விரைவாக அம்பு எய்யும் ஆற்றல் உடைய வர்கள். ஆகையால், ஐயா இந்த மலைப்பக்கம் வந்து விடாதீர்கள். காவல் அதிகம் என்று தோழி எச்சரிக்கை செய்வதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

காதல் வேகம் என்பது எல்லா காவல்களையும், கட்டுப்பாடுகளையும் மீறி வரக்கூடியது என்பது நமக்குத் தெரியும். அதனால் தான் வரக்கூடிய ஆபத்துக்களை யெல்லாம் தோழி தலைவனுக்கு எடுத்துக்காட்டுகிறாள்.

அருஞ்சொற்பொருள்

விரை-மணம். கமழும்-வீசும். புனம்-தினைப்புனம். வரை-மலை. உரை-சொல். கடியர்-கடுமை காட்டுபவர். எமர்-எம் இனத்தவர்.

எம் இனத்தவரால் தீங்கு நேரலாம்

6. யானை உழலும் மணிகிளர் நீள்வரைக்
கானக வாழ்க்கைக் குறவர் மகளிரேம்
ஏனலுள் ஐய! வரவுமற்று என்னைகொல்
காணினும் காய்வர் எமர்.

விளக்கவுரை

தோழி தலைவனுக்கு மேலும் எச்சரிக்கை செய் கிறாள். யானைகள் சுற்றித் திரியும். மணிக் கற்கள் ஒளி வீசித் திகழும் நீண்ட மலைச்சாரலில் உள்ள காட்டில் வாழும் குறவர் இனப் பெண்கள் நாங்கள் நீங்கள் எதை வேண்டி இங்கே வந்தீர்? நீங்கள் இங்கு வந்தது

தெரிந்தால் எம் இனத்தவரால் உமக்கு தீங்கு நேரலாம். அவர்களுடைய வெறுப்புக்கு ஆளாக நேரலாம். ஆகவே, இங்கு வரவேண்டாம் என்கிறாள் தோழி.

அருஞ்சொற்பொருள்

உழலும்–திரியும். மணி–மணிக் கற்கள். கிளர்–ஒளி வீசும். வரை–மலை. கானகம்–குறிஞ்சி நிலம். ஏனல்–தினை. காய்வர்–வெறுப்பர். எமர்–எம் இனத்தவர்.

பழி பொறுக்க மாட்டாள் எம் தலைவி

7. யாழும் குழலும் முழவும் இறைந்தென
வீழும் அருவி விறல்மலை நன்னாட!
மாமழைமான் நோக்கியும் ஆற்றாள் இரவரின்
ஊரறி கௌவை தரும்.

விளக்கவுரை

அழகிய இளம் மானின் மருண்ட பார்வையுடைய கண்களைப் போன்ற விழியுடையவள் எம் தலைவி. நீ அவளைக் காண ஆபத்துக்கள் நிறைந்த காட்டுப் பாதையில் இரவில் வருவதை அவள் தாங்க மாட்டாள். அது மட்டுமன்று நீர் அவளை சந்திப்பது ஊராருக்கு தெரிந்தால் அதனால் வரும் பழிச் சொற்களையும் அவள் தாங்கமாட்டாள். யாழின் இழுமென் ஓசையும் புல்லாங்குழலின் இன்னொலியும், மத்தளத்தின் அதிர்வும், ஒரு சேர முழக்கம் இடுவது போல மலையில் இருந்து அருவிகள் வீழ்ந்து பாயும் வளமைமிக்க, வளம் மிக்க மலையாகத் தலைவனே... இதனை யெல்லாம் நீ எண்ணிப் பார்த்து தலைவியை பார்க்க வருவதை தவிர்ப்பாயாக... என்று தோழி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அருஞ்சொற்பொருள்

முழவு-மத்தளம். இயைந்தென-ஒன்று சேர்ந்தது என்று சொல்லும்படி. விறல்-வலிமை. மாழை-அழகு. நோக்கி-பார்வையுடையவள். இரவரின்-இரவில் வந்தால். கௌவை-பழி.

யானை வரவில்லை... நீயும் வர வேண்டாம்

8. வேங்கை மலர வெறிகமழ் தண்சிலம்பின்
வாங்கமை மென்தோள் குறவர் மகளிரேம்
சோர்ந்து குருதி ஒழுக மற்று இப்புறம்
போந்தது இல்ஐய! களிறு.

விளக்கவுரை

வேங்கை மலர்கள் பூத்துக் குலுங்குவதால் வாச மணம் வீசும் குளிர்ந்த மலைச் சாரலில் வளைந்து அமைந்த மென்மையான தோள்கள் உடைய குறவர் குலப் பெண்கள் நாங்கள். இவ்விடத்தில் ஆண் யானை எதுவும் தாக்குண்டதால் தளர்ந்து இரத்தம் வடிய வந்ததில்லை... என்று தன்னிடமிருந்து தப்பிய யானையைத் தேடி வருவது போல தலைவியைக் காண வந்த தலைவனை தோழி தடுத்து திருப்பி அனுப்புவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அதாவது, மானை, யானையை சாக்காக வைத்துக் கொண்டு தேடுவதைப் போல் வந்து தலைவியைத் தலைவன் கண்டு மகிழ்வது களவொழுக்க நெறியில் நிகழ்வதாகும். பண்டை காலம் தொட்டே எதையேனும் சாக்காக வைத்து தலைவன் தலைவியை சந்திப்பது வாடிக்கையாக இருந்துள்ளது.

அருஞ்சொற்பொருள்

வெறி-வாசம். கமழ-வீச. தண்-குளிர்ந்த. சிலம்பு-மலை. வாங்கு-வளைந்த. அமை-மூங்கில். போந்தது-வந்தது. களிறு-ஆண் யானை.

கார்காலம் வந்து விட்டது!

காதலன் வருவானா...?

9. பிணிநிறம் தீர்ந்து பெரும்பணைத் தோள்வீங்க
மணிமலை நாடன் வருவான்கொல் தோழி!
கணிநிறை வேங்கை மலர்ந்து வண்டுஆர்க்கும்
அணிநிற மாலைப் பொழுது.

விளக்கவுரை

தலைவன் வராததால் பிரிவுத் துன்பம் வந்து தலைவியை வருத்துகிறது. தினைப் புனம் காவல் இனி இருக்காது. தினை அறுவடைக்கு தயாராக இருக்கிறது. ஆகவே, தலைவனை கண்டு மகிழவே முடியாது. போய் விடுமோ என்று தவிக்கும் தலைவி தோழியைப் பார்த்து கேட்கிறாள். என் தோழியே... என் உடம்பு காதல் நோயால் பசலை படர்ந்துள்ளது. நிறம் மாறி கவலையால் மெலிந்த என் திரண்ட மூங்கில்போலும் பெரிய தோள்கள் முன் போல பருத்து விளங்க அழகிய மலை நாட்டுத் தலைவன் வருவானா...? சோதிடம் சொல்வது போல தினைப் புன அறுவடைக் காலம் வந்து விட்டதைக் குறிப்பது போல வேங்கை மரங்கள் மலரத் தொடங்கி விட்டன. தேன் உண்ண வண்டுகள் வந்து ஒலி எழுப்புகின்றன. அழகிய பொன் மாலைப் பொழுதும் வந்து விட்டது. வருவானா தலைவன் என்று தலைவியின் தவிப்பை இந்தப் பாடல் புலப்படுத்துகிறது.

அருஞ்சொற்பொருள்

பிணி–பிரிவுத் துன்மாகிய நோய். தீர்ந்து–நீங்கி. பணை–மூங்கில். மணி–அழகு. கணி–சோதிடன். நிறை–உறுதி. ஆர்க்கும்–ஒலிக்கும் மணி. அணி–அழகிய. நிறம்–வண்ணம்.

தலைவன் நம்மை வெறுத்து விடுவானோ தலைவி...?

10. பலவின் பழம்பெற்ற பைங்கண் கடுவன்
எலஎன்று இணைபயிரும் ஏகல் சூழ்வெற்பன்
புலவும்கொல் தோழி! புணர்வறிந்து அன்னை
செலவும் கடிந்தாள் புனத்து.

விளக்கவுரை

தலைவி, தலைவனை தனியே கண்டு மகிழ்வது தாய்க்குத் தெரிந்து விட்டது. ஆகவே, தினம் புவனக் காவலுக்கு போக வேண்டாம் என்று தலைவியை தடுத்து விட்டாள். இந்நிலையில் தோழி கூறுகிறாள்... பலாமரத்தின் பழங்களைப் பறித்த பசிய கண்களுடைய ஆண் குரங்கானது அடியே... என்று அன்போடு தன் துணையான பெண் குரங்கை அழைத்துப் பழகி மகிழும் உயர்ந்த மலைகள் சூழ்ந்திருக்கும் மலையாகத் தலைவன் நம்மை வெறுத்து ஒதுக்கி விடுவானோ என்கிறாள். தினைப் புவனம் போகக் கூடாது என்று தாய் தடுத்து விட்டாள் நாம் வரவில்லை என்பதனால் தலைவன் கோபித்து நம்மை வெறுப்பான் என்ற தவிப்பை பாடலாக புனைந்திருக்கிறார் புலவர். ஆண் குரங்கு, பெண் குரங்கை அன்போடு அழைத்துப் பேசுகிறது. ஆனால், மனித பிறப்பில் எத்துணை தடங்கல்கள், இடையூறுகள் ஏற்படுகின்றன என்பது குறிப்பாக இக் கற்பனை வரிகள் உணர்த்துகின்றன.

அருஞ்சொற்பொருள்

பைங்கண்–பசிய கண். கடுவன்–ஆண் குரங்கு. எல–அடியே. இணை–பெண் துணை. பயிறும்–பழகும். ஏகல்–உயர்வு. சூழ்–சூழ்ந்திருக்கும். வெற்பன்–குறிஞ்சி நிலத் தலைவன். புலவி–வெறுப்பு. கொல்–வினா குறிப்பு. புணர்வு–கூடல். செலவு–செல்லுதல். கடிந்தாள்–நீங்கி விட்டாள். காப்பு–காவல்.

பாலை

குறிஞ்சியும் முல்லையும் இயல்பில் திரிந்து சுரமாதல் பாலை நிலமாகும்.

தலைவர் பேசிய பொய்யுரை

1. **கழுநீர் மலர்க்கண்ணாய்! கௌவையே நிற்கப்**
   பொருள் நீரார் காதலர் பொய்த்தனர் நீத்தார்
   அழிநீரவாகி அரித்தெழுத்து தோன்றி
   வழிநீர் அறுத்த சுரம்.

விளக்கவுரை

செழுங்கழுநீர்ப் பூப் போன்ற விழிகளையுடைய என் தலைவியே... ஊரார் நம் களவொழுக்கம் பற்றி தூற்றும் பழி ஒரு பக்கம் இருக்கட்டும். பொருள் தேடி செல்வதிலேயே குறியாக இருந்த காதலர் களவொழுக்க காலத்தில் பிரியேன் என்று சொன்னதெல்லாம் பொய்யாகப் போயிற்று அவர் பொருள் தேடி வர புறப்பட்டுச் சென்று விட்டார். அழிவு, வறட்சி, எங்கும் நிறைந்த கானல், நீரற்ற பாலைவனம் பாதையில் அவர் சென்றுள்ளார். அந்தப் பாதை அவருக்கு துன்பம் தரக்கூடியவை என்று ஆதங்கத்துடன் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளத.

களவொழுக்கத்திற்கு ஊரார் ஆதரவு தெரிவிப்ப தில்லை. கற்பு மணத்திற்கு அவர்கள் வாழ்த்து உண்டு என்று அறியப்படுகிறது. அக்காலத்திலிருந்து பெற் றோருக்குத் தெரியாமல் காதலனை காண்பது

பெண்களுக்கு வழக்கமாக இருந்திருக்கிறது. பருவ உணர்ச்சியின் காரணமாக எல்லா எல்லைகளையும் மீறிச் செல்வது காதல் வேகத்தின் சுபாவம். இந்த வேகத்தை நல்ல செயல்களுக்கு திருப்பி விட்டால் மகத்தான வெற்றிகள் கிடைக்கும் என்று சான்றோர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த காதல் வேகம் என்பதே மகத்தான செயல்களுக்கு அதை திருப்புவதற்குதான் ஏற்பட்டதோ என்று நாமும் கற்பனை விளக்கத்தை அளிக்கலாம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அருஞ்சொற்பொருள்

கெளவை–பழிச்சொல். பொருள் தீரார்–பொருள் தேடுதலைக் கொண்ட தன்மையர். காதலர்–அன்பானவர். நீர்தார்–பிரிந்தார். அழிநீரவாகி–அழிவே எங்கும் உளவாக. அரி–பொய்த்தேர். கானல் வழிநீர்–நீர் வரத்து. அறுத்த–அறம் வறண்ட. கரம்–பாலைவனப் பாதை.

தலைவி படும் துயர் அறிவாயா...?

2. முரிபரலவாகி முரண்அழிந்து தோன்றி
எரிபரந்த கானம் இயைபொருட்குப் போவீர்
அரிபரந்த உண்கண்ணாள் ஆற்றாமை நும்மின்
தெரிவார் யார் தேரும் இடத்து.

விளக்கவுரை

உடைந்து போன உறுதியற்ற சிறிய, சிறிய பருக்கை கற்கள் எங்கும் நிறைந்திருக்கின்றன. காட்டுத் தீ பற்றி எரிகிறது. அந்த வழியே பொருள் தேடிச் சென்ற தலைவனே... படர்ந்த மை தீட்டிய கண்களையுடைய எம் தலைவியின் பிரிவு துயரை உன்னைவிட யார் அறியமுடியும்? தலைவியைவிட பொருளைப் பெரிதாக நினைத்து சென்ற தலைவா... உன் பிரிவால் எம் தலைவி

படும் துயரை அறிவாயா என்று தோழி கேட்டதுபோல் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

பொருள் இல்லாவிட்டால் இல்வாழ்க்கையை எப்படி தொடரமுடியும்? தோழிக்கு இது தெரியாதடி...? இருப்பினும் தலைவியின் துயர நிலையினைக் கண்டு பொறுக்காதவனாய் எல்லாம் தெரிந்திருந்தும் தலைவனை குறை கூறும் பாவனையில் தோழி பேசுகிறாள். தலைவியை கடைசிவரை காப்பாற்றவே தலைவன் பொருள் தேடச் செய்கிறான் என்பது உண்மையாக இருந்தாலும் தலைவன் தோழியால் நிந்திக்கப்படுகிறான். காதல் வேகம் என்பது கடமையைகூட புறக்கணித்து பேசும்படி வைக்கிறது. காதலுக்கு இத்துணை பெரிய சக்தியை அளித்த இறைவன் அந்த காதலுக்கே அந்த சக்தியை பயன்படுத்தச் சொல்லவில்லை. வேறு நல்ல அரிய செயலுக்கு அதை திருப்பி விடவே அந்த சக்தியை அவர் அளித்திருக்க வேண்டும். காம சக்தியை அடக்குவதால் ஓஜஸ் என்ற மகத்தான சக்தி சேமிக்கப்படுவதாக யோகிகள் கூறுகிறார்கள். ஆகவே, இறைவனின் திருவுளம் இந்த காதல் வேகத்தை நாம் நல்ல முறையில் திருப்பலாம் என்ற கற்பனை விளக்கத்தையும் உங்களுக்குத் தருகிறோம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அருஞ்சொற்பொருள்

முரி–உடைந்த. பரவலாகி–சிறு கற்களாகி. முரண்–வலிமை. எரி–நெருப்பு. பரந்த–பற்றி எரியும். கானம்–குறிஞ்சி நிலம். இயை–வேண்டிய. பொருள்–செல்வம். அரி–செல்வரி. உண் கண்–மை உண்ட, மை தீட்டப்பட்ட கண்கள். ஆற்றாமை–தாங்கிக் கொள்ள முடியாமை. தேரும் இடத்து–ஆராய்ந்து பார்க்கும் போது.

தலைவர் வாய்மொழி பொய்மொழி ஆயிற்றே தோழி...

3. ஓங்கு குருந்தோடு அரும்பீன்று பாங்கர்
மராஅ மலர்ந்தன தோன்றி விராஅய்க்
கலந்தனர் சென்றார் வலந்தசொல் எல்லாம்
பொலந்தொடீ பொய்த்த குயில்.

விளக்கவுரை

உயர்ந்தோங்கி வளர்ந்துள்ள குருந்த மரங்களில் மொட்டுகள் தோன்றியுள்ளன. பக்கத்திலுள்ள மரா மரங்கள் தோன்றிப் பூத்து மணம் வீசத் தொடங்கி விட்டன. கூடிக் கலந்து மகிழ்ந்த தலைவர் இப்போது பிரிந்து சென்றுள்ளன. பிரியும் முன் அவர் சொன்ன உறுதி மொழிகள் எல்லாம் பொய் என்பதை மெய்ப் பிக்கும்படி குயில் கூவி வேனில் காலம் வந்து விட்டதை காட்டி விட்டன. பொன் வளையணிந்த தோழியே... நம் தலைவர் வாய்மொழி பொய் என்று புரிய வைத்து விட்டன என்று மனவருத்தத்துடன் தலைவி தோழியிடம் புலம்புவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

காதலர்கள் சந்திக்கும்போது பேசும் உறுதி மொழிகள் பெரும்பாலும் பொய்யாகித்தான் போகின் றன. பெண்களிடம் ஆசை வார்த்தைகள் சொல்லி மயங்குவது காலங்காலமாக இருந்து வருகிறது. அந்த காலத்தில் சொல்லும் வார்த்தைகள் காம மயக்கத்தில் வருபவை. அதை உண்மை என்று நம்பும் பெண்கள் ஏமாற்றமடைகிறார்கள். தலையும் அந்த வரிசையில் வந்த பெண்தான். ஆனால், தலைவன் வரும் காலம்... போகும் காலம் ஆகியவை கற்பனைத் திறனுடன் படைக்கப்பட்டிருக்கின்றன. அந்த கற்பனைகள் மனதிற்கு இதம் அளிப்பவை. அதனால்தான் தமிழ் இலக்கியங்கள் உயிருக்கும் மேலாக போற்றப்பட்டு

வருகின்றன. மனதுக்கு இதமும், ஓய்யும் கிடைத்தால் வாழ்க்கையில் பல அற்புத சாதனைகளைப் படைக்க லாம் இந்த கண்ணோட்டத்தில் திணைமொழி ஐம்பது வர்ணனைகளை படித்து பயன் பெறவேண்டும். இச் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

அரும்பு–மொக்கு. பாங்கர்–பக்கம். மரா–மரா மரம். விரா அய்க்–கலந்து. வலந்த சொல்–உறுதிமொழி.

ஆசையில் திளைக்கும் தலைவி

4. **புன்னை பொரிமலரும் பூந்தண் பொழில் எல்லாம்**
செங்கண் குயில் அகவும் போழ்து கண்டும்
பொருள் நசைஉள்ளம் துரப்பத் துறந்தார்
வரும்நசை பார்க்கும் என்நெஞ்சு.

விளக்கவுரை

பொரி போலப் பூக்கள் பூக்கும் புன்னை மரங்கள் நிறைந்த குளிர்ந்த பூ மலர்ச் சோலைகளில் எல்லாம் சிவந்த கண்களுடைய குயில்கள் கூறுகின்றன. இது இளவேனில் காலம் வந்து விட்டதை உணர்த்துகிறது. பொருள் தேடும் ஆசையால் நம்மை விட்டுப் பிரிந்து போனார் தலைவர். இளவேனில் காலம் வந்து விட்டதால் மீண்டும் அவர் வருவார். தலைவியின் இந்த ஆசையை வெளிப்படுத்துவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது. வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் இருக்கும் மனித சமுதாயம் புலவர் கூறும் இந்த இயற்கை வர்ணனைகளை வாசிக்கும் போது மனம் அமைதி அடைகிறது என்பதை திரும்ப, திரும்ப விளக்கவுரையில் கூறி வருகிறோம். புலவரும் கூறியவற்றையே தலைவன்... தலைவி... விஷயத்தில் கூறுகிறார். அதனால், இயற்கை வர்ணனைகள் நம்

மனதிற்கு ஒய்வு அளித்து புத்துணர்வு தருகின்ன என்ற பேருண்மையை நினைவுபடுத்தி வருகிறோம். தமிழ் இலக்கியங்கள் எல்லாமே மனதிற்கு புத்துணர்வை கொடுப்பவைதான். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

பொரி–நெல் பொரி. தண்–குளிர்ந்த. அகவும்–கூவும். போழ்து–வேனில்காலம். நசை–விருப்பம். துரப்ப–ஊக்கம் தர. வரும்–வந்து சேரும்.

அன்பை மறக்கலாமா...?

5. சிறுபுன் புறவொடு சிற்றெழால் சீறும்
நெறிஅரு நீள்சுரத்து அல்குவர்சொல் தோழி!
முறிஎழில் மேனிபசப்ப அருள் ஒழிந்து
ஆர்பொருள் வேட்கை அவர்.

விளக்கவுரை

சிறிய ஒரு புறாவுடன் வல்லூரு சீறிச் சினந்து சண்டையிடும். சரியாக வழிகாணமுடியாத நீண்ட பாலைவனப் பாதை அது. என் அன்புத் தோழியே... இளந்தளிர் போன்ற என் அழகிய உடம்பில் பசலை படருகிறது. என்மீது கொண்ட அன்பை மறந்து பொருளுக்கு முக்கியத்துவம் தந்து தலைவர் சென்றார். பொருள் மீது கொண்ட ஆசையால் அங்கேயே தங்கி விடுவாரா... இல்லை... தங்கமாட்டார் வருவார்... என்று பலவாறாக ஆதங்கம் கொள்வதை புலப்படுத்தும் பாடலாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. அருள் இல்லார்க்கு அவ்வுலகு இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. பொருள் தேடினால் தானே வாழ்க்கையை காலம் முழுவதும் நடத்த முடியும். தலைவி மீது வைத்த

ஆசையால் பொருள் தேடாமல் இருந்தால் தலைவியும், தலைவனும் எப்படி மகிழ்ச்சியாக வாழமுடியும்? இதெல்லாம் தலைவிக்கும் தெரியும். ஆனாலும், காதல் நோய் இப்படி யெல்லாம் தலைவன் மீது குறை கூற வைக்கிறது. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

புன்–அற்பம். சிற்றெழால்–சிறிய வல்லூறு. சீறும்–மோர்கும். நெறி–வழி. நீள்கரம்–நீண்ட பாலைவனப் பாதை. அங்குதல்–தங்குதல். முறி–இளந்தளிர். எழில்–அழகு. பசப்பு–பசலைப் படர (காம வசப்பட்டவர் உடம்பில் படரும் தேமல்). அருள்–அன்பு. ஆர்–நிறைந்த. வேட்கை–ஆசை.

வீட்டை விட்டு வெளியேறிய தலைவன், தலைவி

6. கருங்கால் மராஅம் நுணாவோடு அலர
இருஞ்சிறை வண்டினம் பாலைமுரல
அரும்பிய முள்எயிற்று அஞ்சொல் மடவாய்
விரும்பு நாம் செல்லும் இடம்.

விளக்கவுரை

தலைவனும், தலைவியும் தனியே வீட்டை விட்டு வெளியேறி விடுகின்றனர். இது உடன்போக்கு எனப் படும். அவ்வாறு தலைவியை அழைத்துச் செல்லும் தலைவன், தலைவியிடம் தான் செல்லும் பாதையினைப் பற்றிக் கூறுவதாக இந்தப் பாடல் அமைந்துள்ளது. தலைவன் கூறுகிறான்... கருமை நிறமுடைய அடிப் பாகத்தையுடைய மராமரமும், நுளா மரமும் பூத்திருக் கிறது அதில் பெரிய சிறகுகளையுடைய வண்டினங்கள் வந்து மொய்த்து பாலை பண்பாடும் இடம் அது. சிறிய கூர்மையான பற்களையுடைய இன்சொல் பேசும்

எனக்கு இனிய இளம் பெண்ணே... நாம் செல்லும் இடம் அதுதான். இப்படி தலைவன் பாதையைப் பற்றிக் கூறுகிறான். வீட்டை விட்டு காதலர்கள் வெளி யேறுவது மகிழ்ச்சி தரக்கூடியது அல்ல. ஆனாலும் இரு வீட்டார்கள் கண்டிப்பு இப்படி செய்ய வைக்கிறது. அக்காலத்திலிருந்து இக்காலம் வரை காதலர்கள் வீட்டை விட்டு வெளியேறுவது நடந்து கொண்டுதான் இருக்கிறது. பெற்றோர்களை மறக்கும் அளவுக்கு காதலில் சக்தி அதிகம் உண்டு. இந்த சக்தியை விரயம் ஆக்காமல் நல்ல விஷயங்களுக்கு திருப்ப முடியும் என்று சான்றோர்கள் கூறியிருக்கிறார்கள். இதனையும் மனதில் பதிய வைத்து திணைமொழி ஐம்பது தமிழ் இலக்கியத்தை படிக்க வேண்டுகிறோம். இச்சிந்தனை களைத் தூண்டும்விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

கருங்கால-கருத்த அடிமரம். அலர-பூக்க. இரும் சிறை-பெரிய இறகு. பாலை-பாலை நிலத்துக்குரிய இது பஞ்சுரம் எனப்படும். முரல்-ஒலிக்க. அரும்பிய-முளை. முள்-கூர்மையான. எயிறு-பல். அம்சொல்-அழகிய சொல். மடவாய்-பெண்ணே.

காட்டுப் பாதையை கடந்து போகும் தலைவன்

7. கல்அதர் வாயில் கருந்துடிகள் பம்பும்
வில்லுழுது வாழ்நர் குறும்புள்ளும் போவார்கொல்
எல்வளை மென்தோள் நெகிழப் பொருள்நசைஇ
நல்காத் துறந்த நமர்.

விளக்கவுரை

பொருள் தேடும் பொருட்டு தலைவன் காட்டுப் பாதையில் போனான். அந்த வழியில் உள்ள துன்பங்களை எண்ணி கவலைப்பட்ட தோழிக்கு ஆறுதல் கூறும் விதமாக தலைவி கூறுகிறாள்... பாறைக் கற்கள் நிறைந்த

பாதை அது. ஊர்கள் தோறும் கடுங்கண் உடுக்கைகள் ஒலிக்க ஆரவாரம் முழக்கம் கேட்கும். வில்லெறிதலே தொழிலாகக் கொண்டவர்கள் வாழும் ஊர் அது. இந்த ஊர்களையெல்லாம் தலைவர் கடந்து போவாரா...? மென்மையான தோள்களில் அணியப் பெற்ற ஒளிவீசும் கைவளையல்கள் கழன்று விழ, பொருள் தேடும் ஆசையால் நமக்கு இத்துன்பத்தை தந்து விட்டு நலம் தராது பிரிந்து சென்றார் நம் தலைவர் என்று தலைவி கூறினாள். காதல் மயக்கம் கொண்டவர்கள் பேச்சு தடுமாறும். பொருள் தெளிவாக இருக்காது அதுபோல் தான் தலைவியின் சொற்கள் இருக்கின்றன. அந்த சூழலுக்கு தகுந்தாற்போல் புலவர் பாடலைப் புனைந் திருப்பது வியப்பினைத் தருகிறது.

அ.பொ:

கல்-கற்கள். அதர்-வழி. வாயில்-இடம். கருந்துடிகள்-கருமையான கண்களுடைய உடுக்கை. பம்பும்-முழக்கமிடும். குறும்பு-பாலை நிலத்து ஊர். எல்-ஒளி. வளை-கைவளை. நெகிழ-கழன்று விழ. நசைஇ-விரும்பி. நல்கா-நன்மை தராத. துறந்த-பிரிந்த. நமர்-நம்மவர்.

வீட்டை விட்டு வெளியேற சம்மதிக்காத தலைவி

8. **கதிர்சுடக் கண்ணுடைந்து முத்தம் சொரியும்
வெதிர் பிணங்கும் சோலை வியன்கானம் செல்வார்க்கு
எதிர்வன போல்இலவே எல்வளையோ கொன்னே
உதிர்வன போல உள.**

விளக்கவுரை

தலைவன், தலைவியை அழைத்துக் கொண்டு தனியே போக விரும்புகிறான். இந்த உடன்போக்கை ஏற்றுக்கொள்ள விரும்பாத தலைவி தோழியிடம்

கூறுகிறாள்... சூரிய வெப்ப சூடு தாங்காமல், மூங்கில் கணுக்கள் உடைந்து, முத்துக்களைச் சிந்தும் மூங்கில் புதர் மண்டிய பெரிய காட்டுவழியில் செய்ய விரும்பி தலைவன் அழைத்தான். அதற்கு உடன்படாததுபோல ஒளிமிக்க என் கைவளையல்கள் கழன்று விழுகின்றன.

அ.பொ:

கண்-மூங்கில். கணு. முத்தம்-மூங்கில் கணுக்களில் உதிரும் மூங்கிலரிசியை முத்து என்பர். வெதிர்-மூங்கில். பிணங்கும்-கலந்திருக்கும். வியன்-அகன்ற. கானம்-காடு. எதிர்வன-ஒப்பன. எல்-ஒளி. கொன்னே-தானே உதிர்தல் கழன்று விழுதல்.

மார்பும் உடம்பும் தளர்ந்தது தோழி

9. கலையொடு மான்இரங்கும் கல்அதர் அத்தம்
நிலைஅஞ்சி நீள்சுரத்து அல்குவார்கொல் தோழி!
முலையொடு சோர்கின்ற பொன்வண்ணம் அன்னோ
வளையொடு சோரும் என்தோள்.

விளக்கவுரை

ஆண் மானோடு, பெண் மானும் நீரின்றி வருந்தும் பாறைக் கற்கள் நிறைந்து பாலை நில வழிப்பாதையின் நிலமை தெரிந்தும், அந்த நீண்ட பாலைவனத்தில் நம் தலைவர் தங்கியிருப்பாரா தோழி...? அவர் பிரிவால் ஐயோ... என் மார்பும், பொன்னிற உடம்பும் மெலிந்து தளர்ந்து விட்டன. தோள்கள் மெலிந்து கை வளையல் களும் கழன்று விழுகின்றன என்று தோழியிடம் தன் ஆற்றாமையைச் சொல்வதாக இப்பாடல் புனையப் பட்டுள்ளது. தலைவர் சென்ற பாதை கொடிய வறண்ட பாதை. நீர் கிடைக்காத அந்த பாலைவனப் பாதையில் நம் தலைவர் தங்கியிருக்க மாட்டார் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனாலும், அவர் பிரிவால் உடல் மெலிந்தது... கைவளை கழன்றது. என்ன செய்வேன்? என்பது போல தலைவி புலம்புகிறாள். ஆண்மானும், பெண்

மானும் நீரின்றி தவிப்பது போல தலைவன்... தலைவி பிரிவால் தவிக்கின்றனர் என்பது இங்கே குறிப்பாக உணர்த்தப்படுகிறது. திரும்ப, திரும்ப தலைவன்-தலைவி பிரிவை சொல்வதால் இந்த சமுதாயத்திற்கு என்ன பயன்? என்பதையும் சிந்திக்க வேண்டும். கற்பனை வர்ணனைகள் மனதிற்கு ஒய்வு வருகிறது. மனம் ஒய்வு பெற்றால் அது முன்பை விட பல மடங்கு வலிமை பெறுகிறது. பொதுவாக எல்லோரும் உடல் ஓய்வைப் பற்றித் தெரிந்திருக்கிறார்கள். தூங்கினால் உடல் சோர்வு மாறும். வீட்டிலேயே ஓய்வு எடுத்தால் உடல் சோர்வு போகும் என்பதைப் பற்றியே சிந்திக்கிறார்கள். ஆனால், மனத்திற்கு ஓய்வு கொடுப்பதைப் பற்றி பெரும்பாலோர் சிந்திப்பதில்லை தூக்கத்தைவிட மனத்திற்கு ஓய்வு கொடுக்கும் முறையால்தான் நாம் பரிபூரண ஓய்வைப் பெறுகிறோம். திணைமொழி ஐம்பதில் கூறப்பட்டிருக்கும் வர்ணனைகள் நம் மனதிற்கு ஓய்வைத் தருகின்றன என்கிற ரீதியில் இந்நூலை வாசிக்க வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

கலை-ஆண் மான். இரங்கும்-தண்ணீருக்காகத் தவிக்கும். கல்-பாறைக்கல். அதர்-வழி. அத்தம்-பாலைநிலம். சுரம்-பாலைவனம். அங்குதல்-தங்குதல். வண்ணம்-நிறம். அன்னோ-அந்தோ. சோரும்-தளரும்.

என் மகன் எப்படி நடப்பானோ?

10. ஏற்றிய வில்லின் எயினர் கடுஞ்சுரம்
பாற்றினம் சேரப்படுநிழல் கண்டஞ்சிக்
கூற்றன வல்வில் விடலையோடு என்மகள்
ஆற்றும் கொல் ஐய நடந்து.

விளக்கவுரை

தலைவி, தலைவனோடு உடன் போகியதை அறிந்த செவிலித்தாய் எப்படித்தான் என் மகள் அந்த பாலை நிலப் பாதையில் சென்றாளோ? என்று வருந்தி கூறி யவை... நாண் ஏற்றி அம்பு எய்வதற்கு ஆயத்தமாக உள்ள வில்லினை ஏந்திய வேடர்கள் வாழும் கொடிய பாலைவனம் அது. அங்கே பருந்துகள் கூட்டமாக வானில் பறக்கும். அப்படி பறக்கும் பருந்துகளில் நிழல் கீழே விடும். அவை பார்ப்பதற்கு அச்சமூட்டுபவை. இப்பாதையில் எமனைப் போல, வலிமையான வில் ஏந்திய காளைத் தலைவனுடன் என் மகள் நடந்து செல்ல வல்பவனோ? என்று செவிலித்தாய் புலம்பு கிறாள்.

அ.பொ:

ஏற்றிய-நாண் பூட்டிய. எயினர்-வேடுவர். கடும் சுரம்-கொடிய பாலைவனம். பாற்றினம்-பருந்துக் கூட்டம். படுநிழல்-விழும் நிழல். கூற்றன-எமன் போல. விடலை-காளை பருவத்தினர். விடலை-பொறுத்தல். ஆற்றும் கொல்-இயலுமோ? ஐய-இரக்கக் குறிப்பு.

❑ ❑ ❑

முல்லை

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை.

உன் தோள்கள் பூரித்துப் பொலிக...

1. **அஞ்சனம் காயா மலரக் குருகிலை**
ஒண்தொடி நல்லார் முறுவல் கவின்கொளத்
தண்கமழ் கோடல் துடுப்பூஈனக் காதலர்
வந்தார் திகழ்க நின்தோள்.

விளக்கவுரை

பொருள் ஈட்டுவதற்காக பிரிந்துபோன தலைவன், தலைவியை மணம் முடிக்க வந்து விட்டான். இந்த செய்தியை தோழி சென்று தலைவியிடம் கூறுகிறாள். தலைவன் பிரிவால் வாடி மெலிந்த உன் தோள்கள் பூர்த்து பொலியட்டும் என்று வாழ்த்துகிறாள்... காயாம் பூச் செடிகளில் பை போன்ற கரிய நிறமுடைய பூக்கள் மலர்ந்திருக்கிறது. குருக்கத்திச் செடிகள் அழகிய வளையல்கள் அணிந்து குலமகளிர் முத்துப் பல் போல் முறுவலித்து அழகு காட்டுகின்றன. குளிர்ந்த நறுமண முடைய வெண் காந்தள் துடுப்பு போன்ற மலர்க் கொத்துக்களைக் கொண்டிருக்க பிரிந்த உன் தலைவர் மணம் பேச வந்து விட்டார். ஆகவே, பிரிவு துயரால் மெலிந்த உன் தோள்கள் பூர்த்துப் பொலிவு பெறும் என்று தோழி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள் ளது.

தலைவன் பிரிவால் தளர்ந்த தோள்கள் அவன் வருகையால் பொலிவு பெறும் என்பது உட்பொரு ளாகும்.

அ.பொ:

அஞ்சனம் காயா மலர-கரிய நிறமை போல காயாம் பூக்கள் பூக்க. குருகு இலை ஒண்தொடி நல்லார் முறுவல்கவின்-குருக்கத்தி இலைகள் அழகிய வளையல் அணிந்த பெண் நல்லார பல்வரிசை போல் அழகு காட்ட. தண் கமழ் கோடல் துடுப்பு என-குளிர்ந்த நறுமணம் வீசும் வெண்காந்தள் மலர்கள் துடுப்பு போல பூத்துக் குலுங்க. காதலர் வந்தார் திகழ்க நின்தோள்-தலைவர் வந்து விட்டார் இனி உன் தோள்கள் பூரித்து பொலியட்டும்.

கார்பருவம் வந்தது...
காதலரும் வந்து விடுவார்...

2. மென்முலைமேல் ஊர்ந்த பசலை மற்று என்னாம்கொல்
நன்னுதல் மாதராய்! ஈதோ நமர் வருவர்
பல்நிற முல்லை அரும்பப் பருவம் செய்து
இந்நிறம் கொண்டது இக்கார்.

விளக்கவுரை

தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்கு, தோழி ஆறுதல் கூறுகிறாள். கார்காலம் வந்து விட்டது. காதலரும் வந்து விடுவார் கவலைப்படாதே என்று கூறுகிறாள். மென்மையான உன் மார்பகங்களில் படர்ந்த பசலை இனி என்ன செய்து விடும்? அழகிய நெற்றியை உடைய தலைவியே... இதோபார் நம் பற்களின் நிறம் போல முல்லை மலர்கள் பூத்துவிட்டன. கார்பருவம் வந்து விட்டது காதலர் வந்து விடுவார். கவலைப்படாமல் இருப்பாயாக என்று தோழி ஆறுதல் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ:

ஊர்ந்த-படர்ந்த. பசலை-தேமல். நுதல்-நெற்றி. ஈதோ-இப்போது. நமர்-நம்மவர். பருவம்-கார்ப்பருவம். கார்-கார்க்காலம்.

இன்றில்லை என்றாலும் நாளை தலைவர் வருவார்

3. சென்றார் வருவார் செறிதொடீஇ கார்இஃதோ
வெஞ்சின வேந்தர் முரசின் இடித்துரறித்
தண்கடல் நீத்தம் பருகித் தலைசிறந்து
இன்றையின் நாளை மிகும்.

விளக்கவுரை

கைநிறைய வளையல்கள் அணிந்துள்ள என் தலைவியே. இதோபார் கார்காலம் வந்து விட்டது. அதற்கு அடையாளமாக சினமுற்றுப் போரிடப் புறப் பட்ட அரசர்கள் போர் முரசு ஒலிப்பதைப் போல் குளிர்ந்த கடல் நீரை முகர்ந்து சென்ற கார்மேகம் இடிஇடித்து முழங்குகிறது. ஆகவே, பொருள் தேடப் புறப்பட்டுச் சென்ற தலைவர் இன்றில்லை எனில் நாளை வந்து விடுவார் என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

தலைவன் பிரிவில் தலைவி துயரம் அடைவதை திரும்ப, திரும்ப திணைமொழி ஐம்பது கூறுகிறது. தலைவன் மேல் வைத்த அன்பு தலைவியை அலைகழிக் கிறது. இந்த அன்பு என்ற சக்தி மகத்தானது அதுவும் காதல் வேகம் மிகவும் வேகமானது இந்த சக்தியை வேறு பல நல்ல செயல்களுக்கு திருப்பிவிட முடியும் என்று சான்றோர்கள் கூறியிருக்கிறார்கள். அதனால்தான் விளக்கவுரையில் நாமும் தொடர்ந்து இந்த செய்தியை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறோம்.

அ.பொ:

செறி-அடர்த்தி. தொடி-வளையல். கார்-கார்காலம். வெஞ்சிமை-கடும் கோபம். இடித்து உரறி-இடி இடத்து. முழங்கி-நீத்தம். வெள்ளம்-தண்ணீர்.

தலைவியே... நீ மகிழ்வாயாக...

4. செஞ்சுணங்கின் மென்முலையாய்! சேர்பசலை தீர்இஃதோ
வஞ்சினம் சொல்லி வலித்தார் வருகுறியால்
வெஞ்சினம் பொங்கி இடித்து உரறிக் கார்வானம்
தண்பெயல் கான்ற புறவு.

விளக்கவுரை

செந்நிறத் தேமல் படர்ந்த மென்மையான மார்பகம் உடைய தலைவியே... இனி நீ வேதனைப்பட வேண்டாம். உன்னைப் பிரியமாட்டேன் என்று உறுதி கூறிச் சென்ற தலைவர் திரும்பும் காலம் வந்து விட்டது. அதற்கு அடை யாளமாக கார்கால மேகம் மிகுந்த சினம் கொண்டது போல மின்னி முழங்கி இடிஇடித்து முல்லை நிலமெங் கும் பெருமழையை பெய்ந்துள்ளது. ஆகவே, தலைவன் பிரிவால் உண்டான காதல் வேதனை இனி இல்லை. மகிழ்ச்சி கொள்வாயாக என்று தோழி கூறுவதாக இப் பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ:

செஞ்சுணங்கு–செந்நிறத் தேமல். சேர் பசலை–படர்ந்த தேமல். வஞ்சினம்–கடும் கோபம். வலித்தல்–சொல்லுதல். குறி–அடையாளம். உரறி–முழங்கி. பெயல்–மழை. கான்றல்–பொழிதல். புறவு–முல்லை நிலம்.

தலைவர் இப்போதே வருவார் கவலைப்படாதே

5. கருவியல் கார்மழை கால் கலந்துஏந்த
உருகு மடமான் பிணையோடு உகளும்
உருவ முலையாய்! நம்காதலர் இன்னே
வருவர் வலிக்கும் பொழுது.

விளக்கவுரை

கடல் நீரை முகந்து கமக் கொண்ட கார்கால கடல் மழை மேகம் காற்றோடு கலந்து வானுயர்ந்து பொழி கிறது. முன்பு வெப்பத்தால் நீரின்ற தவித்த இளமான்

தன் துணையாகிய பெண்மானுடன் துள்ளி விளையாடும் காலம் வந்திருக்கிறது. ஆகவே, அழகிய மென்மையான மார்பு உடைய தலைவியே... நம் தலைவர் இப்போதே வந்து விடுவார். கவலை வேண்டாம். இதையே உறுதிப்படுத்துகிறது கார்காலம் என்று தோழி ஆறுதல் மொழி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ:

கரு–சூல். இயல்–தன்மை. கார்–கார்காலம். கால்–காற்று. கலந்து–சேர்ந்து. ஏந்த–மேலாக. உருகி–வருந்தி. மடம்–இன்னம். பிணை–துணை. உகளும்–துள்ளும். உருவ–வடிவ. வலிக்கும்–சொல்லும். பொழுது–காலம்.

தலைவர் வருகைக்கான அடையாளம் வந்து விட்டது

6. இருங்கடல் மாந்திய ஏர்கொள் எழிலி
கருங்கொடி முல்லை கவின் முழங்கிப்
பெரும் பெயல் தாழப் பெயர்குறி செய்தார்
பொருந்த நமக்குரைத்த பொழுது.

விளக்கவுரை

கார்கால மழை பெய்ய கருமுல்லை பூச்சொரியும் காலம் கனிந்து விட்டது. நான் திரும்பி வரும் காலம் என்று தலைவர் சொன்ன காலம் இந்த கார்காலம்தான். பெரிய சமுத்திர நீரை முகந்து எழிலுடன் விளங்கிய கார்மேகங்கள் கரும்பச்சை இலைகளுடைய கொடிகளில் முல்லை மலர்கள் அழகுடன் பூத்துக் குலுங்கும் வண்ணம் இடி இடிந்து பெருமழையைப் பொழிகின்றன. நம் தலைவர் கூறிய அடையாளம் இதுதான். ஆகவே, தலைவர் வந்து விடுவார். கவலை வேண்டாம் என்று தோழி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

கார்கால வண்ணனைகள் நம் மனத்திற்கு ஓய்வை தருகின்றன. சம்சார காடலில் தத்தளித்து அலை பாய்ந்து கொண்டிருக்கும் மனதுக்கும் நல்ல காலம் வந்திருக்கிறது. இந்த கோணத்தில் திணைமொழி ஐம்பது தமிழ் இலக்கியத்தை நீங்கள் வாசிக்க வேண்டும். மனதுக்கு ஓய்வு கொடுக்க பல வழிகள் உள்ளன. யோகிகள் தவம் செய்து மனதை சாந்தம் செய்கிறார்கள். இல்லறத்தில் உழல்பவர்கள் தமிழ் இலக்கிய வர்ணனைகளை கவனமாக சிந்தித்து ரசிப்பதன் மூலம் அதே ஓய்வை மனதிற்கு தரமுடியும். திணைமொழி ஐம்பதை வாசிப்பதால் மனித சமுதாயம் நல்ல பலனைப் பெறவேண்டும். ஏதோ படித்தோம் முடித்தோம் என்று இருக்கக் கூடாது. இந்த உலகில் வாழும் அனைவருமே உண்மையான லட்சியத்தை அடைவதற்கான பயணங்களில்தான் இருக்கிறார்கள். ஒரு சிலர் முன்னே செய்கிறார்கள். பெரும்பாலோர் பின் தங்கி இருக்கிறார்கள். இதுவே வேறுபாடு. ஆனால், அனைவரும் லட்சியத்தை அடைய வேண்டியவர்களே. இச்சிந்தனைகளைத் துண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

இரும்–பெரிய. மாந்தி–பருகி. ஏர்–அழகு. எழிலி–மேகம். கரும–கரும் பச்சை. கவின்–அழகு காட்ட. முழங்கி–இடித்து. குறி–அடையாளம். பொருந்த–ஏற்ற. பொழுது–காலம்.

மாலைப் பொழுது வந்தது

7. ஆயர் இனம் பெயர்த்து ஆம்பல் அடைதரப்
பாய முழங்கிப் படுகடலுள் நீர்முகந்து
மாயிரு ஞாலம் இருள்கூர் மருள்மாலை
சேயவர் செய்த குறி.

விளக்கவுரை

காலையில் மேய்ச்சலுக்குக் கூட்டிச் சென்ற மாடு களை மேய்ச்சல் களத்தில் இருந்து திரும்ப வீடுகளுக்கு ஓட்டிக் கொண்டு வரும் இடையர்களின் நீண்ட புல்லாய் குடியை வாயில் பொருத்தி ஊதி வருகிறார்கள். அலை முழங்கும் சமுத்திர நீரை முகர்ந்து சென்று பரந்த இம்மண்ணுலகில் இருள் மிகுந்து மயக்கம் தரக்கூடிய மாலைப் பொழுது வந்துள்ளது. பொருள் ஈட்ட வெகுதொலைவு சென்ற நம் தலைவர் வருவதாக சொன்ன மாலைப் பொழுது இதுதான். ஆகவே, தலைவர் வந்து விடுவார். நீ கவலைப்படாதே... என்று தலைவிக்கு தோழி ஆறுதல் சொல்வதாகப் புனையப் பட்ட பாடலாக இப்பாடல் விளங்குகிறது. தலைவர் பிரிவால் தலைவி கவலைப்படுவதற்கு காரணம் அன்பு என்றும் சொல்லலாம். காம மயக்கம் என்றும் கூறலாம். எப்படி இருந்த போதிலும் ஆணிடம் பெண்ணுக்கு ஏற்படும் கவர்ச்சி. பெண்ணிடம் ஆணுக்கு ஏற்படும் கவர்ச்சி ஆகிய இரண்டுமே மகத்தான சக்தி கொண் டவை அதனால்தான் அக்காலத்துப் புலவர்கள் தலை வன், தலைவியை மையமாக வைத்து இலக்கியங்களை படைத்திருக்கிறாள். அண்ணன், தம்பி, அக்காள், தங்கை, மாமன், மைத்துனன் என்று பல உறவுகள் உண்டு. இவர்களுக்குள்ளும் பிரிவுகள் உண்டு. இவற்றை யெல்லாம் இலக்கியமாக ஆக்காமல் ஆண், பெண் சம்பந்தப்பட்ட காதலர் பிரிவைப் பற்றி பல இலக்கியங் களை தமிழ் புலவர்கள் ஆக்கியதற்கு என்ன காரணம்? காமத்தில் மூழ்கி அந்த சக்தியை வீணடிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. ஒருகட்டத்தில் மாபெரும் அந்த காதல் சக்தியை தன்னை தெய்வீக நிலைக்கு மாற்றிக் கொள்ள உதவவேண்டும் என்பதே புலவர்கள் எண்ண மாக இருக்க வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

ஆயர்-இடையர். இனம்-கறவைகள். பெயர்த்து-மீட்டு. ஆம்பல்-புல்லாங்குழல். அடைதர-வாயில் பொருந்த. பாய-பொழிய. படுகடல்-அலைகடல். மாயிரு ஞாலம்-விரிந்து அகன்ற பெரிய பூமிட. இருள்சுடர்-இருட்டு மிகும். மருள்-மயக்கம். மாலை-அந்திமாலை. சேய்மை-தொலைவு. சேயவர-தொலைதூரம் சென்றவர். செய்த-கூறிச் சென்ற. குறி-அடையாளம் பொன் அந்தி மாலைப் பொழுது இன்ப வேட்கைக்கு ஏற்றது. மயக்க மூட்டுவது. ஆகவே, மருள் மாலை எனப்பட்டது.

தலைவர் வருவார்... தேமல் போகும்

8. அதிர்குரல் ஏறொடு அலைகடல் மாந்தி
முதிர்மணி நாகம் அனுங்க முழங்கிக்
கதிர்மறை மாலை கனைபெயல் தாழப்
பிதிரும் முலைமேல் சுணங்கு.

விளக்கவுரை

கேட்பவர்கள் அதிர்ச்சி அடையும் விதமாக ஒலிக்கும் இடிமுழக்கம் மழை மேகம் அலை வீசும் கடல் நீரை முகர்ந்து சென்று உயர்ந்த நாக மணிகளையுடைய பாம்புகள் வருந்தி நடுங்கும். கதிரவன் மறைந்த மாலைப் பொழுதில் கனமழையை பொழிவிக்கும். தலைவியே உன் மார்பில் படர்ந்த தேமல் நீங்கி விடும் என்று தோழி ஆறுதல் கூறுதல். தேமல் (பசலை) பிரிவுத் துயரம் போன்றவை திரும்ப, திரும்ப சொன்ன செய்திகள் தான். ஆனால், கார்கால வர்ணனைகளை மனம் ரசிக்க வேண்டும். அதனால் லௌக்க பதட்டங்கள் மறைந்து மனம் ஒய்வு பெறும். அதன் காரணமாக நம்முடைய எல்லா செயல்களும் சிறப்பாக அமைய திணைமொழி ஐம்பது இலக்கியம் நமக்கு பேருதவி புரிகிறது. இச் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

அதிர்-அதிரும். குரல்-ஒலி. மாந்தி-பருகி. முதிர்மணி-நல்ல நாகமணி. அனுங்க-வருந்த. கதிர்-சூரியன். கனைபெயல்-அடைமழை. தாழ-பொழிய. பிதிரும்-உதிரும். கணங்கு-தேமல்.

கார்கால அழகை கண்டுகளிப்போம் வா...

9. கோடல்அம் கூர்முகை கேளாரா நேர்கருதக்
காடெல்லாம் கார்செய்து முல்லை அரும்புஈன
ஆறெல்லாம் நுண்ணறல் வார அணிஇழாய்
போதராய் காண்பாம் புறவு.

விளக்கவுரை

காந்தள் மலரின் கூர்மையான மொக்குகள் வலிய பாம்பு போல தோன்ற காடுகள் எங்கும் மழை பெய்த தால் முல்லை மலர் பூத்துக் குலுங்குகிறது. செல்லும் வழியெல்லாம் மழை நீர் ஓடியதால் நுண்ணிய கருமணல் படிந்துகிடக்கிறது. தலைவர் வருவதாகச் சொன்ன கார்காலம் வந்து விட்டது. அழகிய அணி மணிகள் புனைந்த என் தலைவியே வா... என்று தலைவியை தோழி அழைப்பது போல் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

செய்திகள் முன்பு கூறியவைதான். ஆனால், வர்ண னைகள் நம் மனதுக்கு ஒய்வு கலந்த இதத்தை தருவதை படித்தல் கூடாது. சில நிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

கோடல்-காந்தள். அம்-அழகிய. முகை-மொக்கு. கேளார-வலிய பாம்பு. நேர்கருத-நிகராகத் தோன்ற. கார்-கார்காலம். ஆறு-வழி. நுண்-நுண்ணிய. அறல்-கருமணல். வார-வழிய. அணி-அணிகலன். போதராய்-வருவாய். புறவு-முல்லை நிலம்.

தலைவர் வருவார் கவலை வேண்டாம்

10. அருவி அதிரக் குருகிலை பூப்பத்
தெரிஆ இனநிரை தீம்பால் பிலிற்ற
வரிவளைத் தோளி வருவார் நமர்கொல்
பெரிய மலர்ந்ததிக் கார்.

விளக்கவுரை

அருவிகள் காட்டாற்று வெள்ளமாய் பேரிரைச்சலுடன் பாய்கின்றன. குருக்கத்தில் செடிகளின் இலைகள் தழைத்து செழித்துள்ளன. நன்கு தேர்ந்த பாலினைப் பொழியும் பசுக்கூட்டங்கள் இனிய பாலைத் தருகின்றன. வரிகளையுடைய வளையல் அணிந்த என் தலைவியே... கார்பருவம் வந்துவிட்டது. நம் தலைவர் வருவார். ஆகவே, வருந்த வேண்டாம் என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ:

அதிர-ஒலி செய்ய. குருகு-குருக்கத்தி. தெரி-தெரிவு செய்த. ஆ-பசு. இனநிரை-கூட்டம். தீம்பால்-சுவைமிக்க பால். பிலிற்ற-சொரிய. கார்-கார்காலம்.

மருதம்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலமாகும்.

இந்த உரிமை ஒன்றே எனக்குப் போதும்

1. **பழனம் படிந்த படுகோட்டு எருமை**
   கழனி வினைஞர்க்கு எறிந்த பறைகேட்டு
   உரனழிந்(து) ஓடும் ஒலிபுனல் ஊரன்
   கிழமை உடையன் என்தோட்கு.

விளக்கவுரை

மருத நிலத்து நெல் வயல்களில் கிடந்து மேய்ந்து கொண்டிருந்த வளைந்த கொம்புகளையுடைய எருமைகள், வயல் வேலை செய்பவர்களை உற்சாகப் படுத்த ஒலிக்கும் பறை ஓசையை கேட்டு பயந்து ஓடும். நீரோடைகள் சலசலக்கும் ஒலியோடும் பாயும். அப்படிப்பட்ட வளம்மிக்க மருத நிலத்து ஊரனாகிய என் தலைவன் முன்பே என்னைக் கடிமணம் புரிந்து கொண்டு என் தோள்களுக்கு உரிய வனாகி விட்டான். இந்த உரிமை ஒன்றே எனக்குப் போதும் என்கிறாள் தலைவி. தலைவன் பரத்தையர் வீடு சென்றிருப்பதை அறிந்து மனவேதனையில் தலைவி இப்படி பேசுகிறாள். மனைவி இருக்க பரத்தையர் வீடு செல்லும் அறியாமை அக்காலத்திலிருந்தே தொடர்கிறது. பெயருக்கு களங்கம் விளைவிக்கும் இந்த செய்கை புகழ் பெற்றவர்கள்கூட செய்தார்கள் என்பதை அறிகிறோம். காம மயக்கம் என்பது எப்படிபட்ட அறிவாளியையும் கீழேத் தள்ளி விடுகிறது. பரத்தையர் வீடு செல்லும் தலைவனுக்கு பரிந்து பேசுபவர்கள் கூட இருக்கிறார்கள். இது தமிழ் பண்பாட்டிற்கு ஏற்புடையதல்ல. என்றாலும் தமிழ் இலக்கியம் இதனை விமர்சனம் செய்யும் பாணியிலேயே

நமக்குத் தந்திருக்கிறது. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

பழனம்-மருதநில வயல். படு-வளைந்த கோடு-கொம்பு. கழனி-வயல். வினைஞர்-வேலையாட்கள். எறிந்த-அடித்து ஒலி எழுப்பிய. உரன்-வலிமை. ஒலி-ஒலிக்கின்ற. புனல்-நீரோடை. கிழமை-உரிமை.

தலைவன் செய்த தீமை

2. **கணைக்கால் நெடுமருது கான்ற நறுந்தாது**
இணைக்கால நீலத்து இதழ்மேல் சொரியும்
பணைத்தாள் கதிர்செந்நெல் பாய்வயல் ஊரன்
இணைத்தான் எமக்கும்ஓர் நோய்.

விளக்கவுரை

நீண்டு உயர்ந்து வளர்ந்த பருத்த அடிமரம் உடைய மருத மரங்கள் பூந்துகள்களை இடையில் உள்ள நிலோற்பலரிதழ்கள் மேல் சிந்துகின்றன. கதிர் பிடித்த பருத்த தாளுடன் கூடிய நெற்கதிர்கள் வயல் வளம் நிறைந்த மருதநில ஊரின் தலைவன் என்னுடலில் தேமல் படர்வதற்கான துன்பத்தை தந்துள்ளான். அதாவது, பரத்தையர் வீடு சென்று தலைவன் இன்பம் துய்ப்பதால் தலைவியை மறந்தான் தலைவிக்கு இன்பம் தராததால் காமநோய்க்கு ஆளானாள் என்பது பொருளாகும். மனைவியிருக்க அவனை புறக்கணித்து விட்டு பரத்தையரைத்தேடி அலையும் அறியாமை தென் பொருட்டு வந்தது? என்பதை ஆராயும்போது காமம் என்பது கொடிய நோய். அந்த நோய் பற்றியவர்களுக்கு இப்படியெல்லாம் கெடுமதி ஏற்படுகிறது என்பதைத் தவிர வேறு காரணம் இல்லை. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ:

கணை-பழுத்த. நெடுமருது-நீண்டு உயர்ந்த மருத மரம். நீலம் - குவளை மலர். பணை-பெரிய தாள், நெற்கதிர்களின் அடிப்பாகம். இணைத்தான்-எனக்கு உண்டாகச் செய்தான். நோய்-துன்பம்.

பரத்தையர் உறவு... கீழ்மக்கள் நட்பு

3. கடையாளர் நட்பேபோல் காஞ்சில் நல்ஊர!
உடைய இளநலம் உண்டாய்-கடையக்
கதிர்முலை ஆகத்துக கண்அன்னார் சேரி
எதிர்நலம் ஏற்றுகின்றாய்.

விளக்கவுரை

காஞ்சி மரங்கள் நிறைந்துள்ள வளமிக்க மருத நிலத்து ஊரின் தலைவனே... கீழ்மக்களுடன் கொண்ட நட்பைப்போல் இருக்கிறது. உன்நடத்தை நீ என் தலைவி இன்மையோரும், அழகோடும் இருக்கும் வரையில் அவனோடு கூடி இன்புற்று சுகம் பெற்றாய். அவன் இப்போது ஒரு குழந்தைக்குத் தாயாக இளமை நலம் குன்றி விட்டாள். ஆகையால், முற்றித்திரண்ட மார்பகங் களை உடைய பரத்தையர் உடல் இன்பத்தை நாடுகிறாய். அவர் வாழும் சேர்க்குச் சென்று அவர் தரும் இன்பத்தை ஏற்று அவர்களை எதிர்கொண்டு நிற் கிறாய். கீழ்மை குணம் கொண்ட அற்பர்கள் நட்பைப் போல கீழ்மக்கள் ஆதாயம் கருதியே பழகிபின் கைவிட்டு விடுவர். பரத்தையர் உறவு என்பது கீழ்மக்கள் நட்பு என்பதை புலவர் இவ்வாறு உணர்த்துகிறார். இத்தகைய ஒழுக்க கேட்டால் தலைவன் பெயர் கெட்டுப்போகும். அது மட்டுமன்றி கர்மவினைமூட்டை மேலும் அதிகரிக் கும். அதன் காரணமாக கருமையான துன்பங்களை அவன் அனுபவிக்க நேரும் என்பதும் குறிப்பாக உணர்த்தப் படுகிறது.

அ.பொ:

கடையர்-கீழ்மக்கள். உடைய-இருந்த. கடைய-குறைய. ஆகம்-உடம்பு. சேரி-இருப்பிடம். ஏற்றுதல்-போற்றுதல்.

உன் புராணம் வேண்டாம்... புறப்படு...

4. செந்நெல் விளைவயல் ஊரன் சிலபகல்
தன்னலம் என்அலார்க்கு ஈயான் எழுபாண!
பாரித்த அல்குல் பணைத்தோளார் சேரியுள்
வாரிக்குப் புக்குநின்று ஆய்.

விளக்கவுரை

பாடி பரிசில் பெறும் பாணன் வருகிறான். அவனிடம் தலைவி கடிந்து பேசுகிறாள். நீ பரிசில் பெறவந்த தலைவன் பரத்தையர் சேரியில் இருக்கிறான். நீ அங்கு போய் உண்மையை அறிந்து கொள். இங்கு வந்து உன் புராணத்தை கூறவேண்டாம். இங்கிருந்து போய்விடு என்று தலைவி கூறுகிறாள். தலைவன்மேல் இருந்த கோபம் பணன் மீது பாய்கிறது. மனைவியிருக்க பரத்தையர் வீடு செல்லும் தலைவனை புகழ்ந்து பாடுவது இழுக்கு என்பதுபோல் பாணனை அவன் கடிந்து பேசுகிறாள்.

அ.பொ:

சில பகல்-சிலகாலம். தன்னலம்-தான் தரும் இன்பக்கம். அலார்-அல்லாதவர். ஈயான்-கொடுக்கமாட்டான். பாரித்த-பரந்த. அல்குல்-மறைவிடம். பணை-மூங்கில். சேரி-இருப்பிடம். வாரிக்கும்-வாரி தரும். புக்குநின்று-போய்ப் பார்த்து. ஆய்-தெரிந்து கொள்.

வண்டு மனம் கொண்ட
தலைவன் நட்பு வேண்டாம்

5. வேனில் பருவத்து எதிர்மலர் ஏற்றூதும்
கூனில் வண்டு அன்ன குளிர்வயல் நல்லூரன்
மாணிறை நல்லார் இளநலம் உண்டவர்
மேனி ஒழிய விடும்.

விளக்கவுரை

இளவேனில் காலத்தில் கண்ணில் தென்படும் பூக்களிலெல்லாம் அமர்ந்து தேனை உண்ணும் குணம் கொண்டவை வளைந்த முதுகுடைய வண்டுகள். அதுபோல குளிர்ந்த வயல்வளம் நிறைந்த மருத நிலத் தலைவன் உயர்ந்த அணிமணிகள் பூண்ட அழகிய பெண்களின் அழகிய இளமை இருக்கும்வரை சுகம் பெறுவர். உடல் அழகு குன்றியதும் அவர்களை விட்டு நீங்கி பரத்தையர்பால் செல்வர். இப்படிப்பட்ட தலைவன் நட்பு எனக்கு வேண்டாம் என்று வேதனை யுடன் தலைவி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள் ளது.

மலருக்கு மலர் தாவும் வண்டுகள் போல் குணம் கொண்ட தலைவனின் நட்புவேண்டாம் என்று தலைவி சொன்னாலும் உள்ளுக்குள்ளே அவன் திரும்பி, திருந்தி வரமாட்டானா...? என்ற ஆதங்கமும் உள்ளது. காம நோய் தந்த தலைவனிடம் எவ்வளவுதான் வெறுப்பு இருந்தாலும் அவன் மீண்டும் தன்னிடமே வரவேண்டும் என்ற ஆசை பெண்களுக்கு இருப்பது இயல்பானது. பரத்தையர் செல்லும் தலைவனைப் பற்றி புலவர் திரும்ப, திரும்ப ஏன் கூறுகிறார்? இதனால் மனித சமுதாயத்திற்கு என்ன பயன்? என்று வினா எழுப்பி நாம் விளக்கவுரை யில் அதனை இணைத்திருக்கிறோம்.

நம் அனைவருடைய இறுதி லட்சியம் என்பது தெய்வீகமாவதுதான். ஒழுக்கம், தீய ஒழுக்கம் ஆகிய அனைத்துமே லட்சியத்தை நோக்கி செல்லும் பயணம் தான். ஒழுக்க முடையவர்கள் வெகு சீக்கிரமாக லட்சி யத்தை அடைவார்கள். ஒழுக்க மற்றவர்கள் தாமதமாக லட்சியத்தை அடைவார்கள். எல்லா நிகழ்வுகளும் லட்சியத்தை நோக்கிச் செல்லும் பயணம் என்பதை வாசகர்கள் மறக்கக்கூடாது.

அ.பொ:

பருவம்-காலம். எதிர்-கண் எதிர். ஏற்று-அமர்ந்து. ஊதும்-வாய் வைத்துப் பருகும். கூனி-வளைவான. அன்ன-போன்ற. மாண்-உயர்ந்த. இழை-அணிகலன். இளநலம்-இளமை இன்பம். உண்டவர்-துய்த்தவர், அனுபவித்தவர். மேனி-உடம்பு.

உன் மேல் குறைகூற ஏதுமில்லை...

6. செந்தாமரை மலரும் செய்வயல் நல்லூர!
நொந்துஎன்மற்று உன்னைச் செய்யப்படுவது-என்னுண்டாம்
தந்தாயும் நீயே தரவந்த நன்னலம்
கொண்டாயும் நீஆயக் கால்.

விளக்கவுரை

பரத்தையர் நட்பைவிட்டு விலகிவந்த தலைவனிடம், தலைவிக்காக தோழி தூது போகிறாள். தலைவன் மீண்டும் தலைவியிடம் அன்பு கொள்ளச் செய்ய அவன் முயல்கிறாள் என்பது பாடலின் பொருளாக அமைந் துள்ளது. செந்தாமரை பூக்கள் மலரும் நன்செய் வயல் வளம் நிறைந்த மருத நிலத் தலைவா... என் தலைவிக்கு இன்ப சுகம் தந்தவன் நீயே. பின்பு அந்த இன்பத்தை விலக்கிக் கொண்டவனும் நீயே. நிலமை இப்படியிருக்க உன்மீது குற்றம் சொல்ல ஏதுமில்லை என்று தோழி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது. கண்ணகி தன் கணவன் மாதவியிடம் மையங் கொண்டு இருந்த போது கணவனை பழிக்கவில்லை. மாதவியை விட்டு பிரிந்து மீண்டும் தன்னிடம் வந்தபோது எந்த சுடு சொல்லும் கூறவில்லை. கணவன் நலனே தன் நலன் என் பது போல நடந்து கொண்டாள் கற்புக்கரசி கண்ணகி. ஆனால், எல்லாப் பெண்களும் கண்ணகி போன்ற குணத்தைப் பெற்றிருக்க முடியாது அல்லவா...? பரத்தையர் சகவாசம் வைத்த தலைவனின் நட்பு எனக்கு வேண்டாம் என்று ஒரு சமயம் சொல்கிறாள் தலைவி.

மற்றொரு சமயம் வேறு மாதிரியாக பேசுகிறாள் என்னிடம் நல்ல இளமை இருந்த வரை என்னுடன் இருந்த தலைவன் வயது முதிர்ந்து நாள் தளர்ந்து விட்டதால் வேறு பெண்களைத் தேடி சென்று விட்டார் என்று வேதனை கலந்த சொற்களை கூறுகிறாள். மற்று மொரு சமயம் தலைவன் புகழ்பாட வந்த பாணனை கோபித்து விரட்டுகிறாள் உன் தலைவன் நடத்தையை சேரியில் போய் தெரிந்து கொள் என்கிறாள். இப்படி பல்வேறு குணநலன்கள் கொண்டவனாக தலைவி இருக்கிறாள். புலவர் யதார்த்தமாக நடக்கும் விஷயங் களை ஐந்திணை ஐம்பதில் எடுத்துக் காட்டுகிறார். இந்த தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்டிருக்கும் கற்பனை வர்ணனைகள் மனிதனின் மனதிற்கு இதமாகவும், ஓய்வு தரும் விதத்திலும் அமைந்திருக்கிறது என்பதை தொடர்ந்து விளக்கவுரையில் நாம் அளித்து வருகிறோம்.

ஆகவே, இத்தமிழ் இலக்கியத்தில் வேண்டாததை விலக்கி வேண்டுவதை எடுத்துக் கொள்ளுங்கள். உடலுக்கு ஓய்வு தரத் தெரிந்தவர்கள் அதிகம். ஆனால், மனதிற்கு ஓய்வுதர தெரியாதவர்கள் மிக அதிகம். ஆகவே, இவ்வியக்கியத்தில் வரும் வர்ணனைகளை மனதிற்கு ஓய்வு தர பயன்படுத்துங்கள். இச்சிந்தனை களைத் தூண்டும்விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

செய்–சீர் செய்யப்பட்ட விளைநிலம். நோதல்–வருந்துதல். நன்நலம்–இன்ப சுகம். ஆய்க்கால்–ஆராயுமிடத்து.

பரத்தையாரிடம் பாசம்...
மனைவியிடத்தில் வேஷம்...

7. **பல்காலும் வந்து பயின்றுரையல் பாண!கேள்**
நெல்சேர் வளவயல் ஊரன் புணர்ந்தநாள்
எல்வளைய மென்தோளேம் எங்கையர் தம்போல்
நல்லஅருள் நாட்டம் இலேம்.

விளக்கவுரை

பாடிப் பரிசில் பெறவந்த பாணனிடம் தலைவி, தலைவன் பரத்தையர் நேசம் விரும்பிச் சென்றதால் உண்டான வெறுப்பை இப்பாடலில் வெளிப்படுத்து கிறாள்...

பாணனே... நீ பலமுறை வந்து இங்கு தலைவனின் புகழை பாட்டிசைக்கத் தேவையில்லை. செந்நெல் விளையும் வயல் வளம் மிகுந்த மருத நிலத் தலைவனுடன் கூடி மகிழ்ந்து இன்புற்ற நாளில் என் போன்ற பெண்கள் ஆண்களுக்கு அழகிய வளையல்கள் அணிந்த எங்கள் தோள்களைத் தழுவ எளிதாக இடம் கொடுத்தோம். எம்தங்கை போன்றவரான பரத்தையர் போல தலைவர் உயிரன்பை பெற்றிருக்கவில்லை. என்ன செய்வது? பொருளுக்கு உடலை விற்கும் பரத்தையரிடம் காட்டும் பரிவு இந்த ஆண்களுக்கு கட்டிய மனைவியிடம் காட்ட முடிவதில்லையே... அதுஏனோ...? என்று ஏக்க பெருமூச் சுடன் தலைவி இப்பாடலில் வெளிப்படுத்துகிறாள். நாமும் இதே வினாவைத்தான் விளக்கவுரையில் தொடர்ந்து கேட்டு வருகிறோம். மனைவி இருக்க பரத்தையர் மீது மோகம் கொள்ளும் சூழலை ஏற்படுத் துவது எது...? எல்லாம் வல்ல பரம் பொருள் தான் எல்லாவற்றையும் படைத்தது என்றால் இந்த தீய குணத்தை மரம் பொருளால் மாற்ற முடியாதா...? இதற்கு திருப்திகரமான பதில் இல்லை என்று தான் சொல்லவேண்டும். அவரவர் கர்மவினைகளுக்குத் தகுந்தவாறு நல்ல புத்தி... கெட்ட புத்தி வருகிறது என்று பதில் கூறுப்படுகிறது. ஆரம்ப காலத்தில் எந்த மனித னும் தீய வினைகளை செய்திருக்க முடியாது என்பது உறுதியாகத் தெரிகிறது. அப்படியிருக்க அவனை தீயவினைகளை செய்ய தூண்டியது யார்? இதற்கும் சரியான பதில் இல்லை. புலவர்கூட திணைமொழி

ஐம்பதில் தலைவனின் தீய நடத்தையை விவரிக்கிறாரே தவிர இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதை சொல்லவில்லை. ஆகவே, இந்த சூழலில் தீயசெயல்களை நாம் தவிர்த்து ஆகவேண்டும். இறைவனின் திருவிளை யாடல் தான் எல்லா நிகழ்வுகளும் என்று சான்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனை ஏற்றுக் கொண்டு அந்த வழியில் செல்லலாம். ஒரு பரம் பொருளே ஒழுக்கமுள்ளவர்களையும், ஒழுக்கம் கெட்டவர்களையும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே, நம்முடைய செயல்கள் எதுவாக இருந்தாலும் ஒழுக்கத்தை நோக்கி நாம் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். தெய்வீகத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை. நாம் அனைவரும் உண்மையில் தெய்வீகமானவர்கள் பண்டைய காலத்தில் வாழ்ந்த தலைவன், தலைவி, பரத்தையர்கூட தெய்வீகமானவர்களே... அவர்களும் அந்த தெய்வீகத்தை அடைய வேண்டியவர்களே. இதனைப் புரிந்து கொண்டு வாழ்க்கைப் பாதையில் நம் செயலில் அமையவேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

பயின்று-மீண்டும். புணர்ந்த நாள்-கூடிஇருந்த நாள். எல்வளை-ஒளிவீசும் வளையங்கள். எங்கையர்-எம் தங்கையர். அருள்-அன்பு. நாட்டம்-விருப்பம்.

பாணனே... பேசாமல் போய்விடு...

8. நல்வயல் ஊரன் நலம்உரைத்தும் நீபாண
சொல்லில் பயின்று உரைக்க வேண்டா ஒழிதிநீ
எல்லுநல் முல்லைத்தார் சேர்ந்த இருங்கூந்தல்
சொல்லுமவர் வண்ணம் சோர்வு.

விளக்கவுரை

தலைவன் புகழ் போற்றிப் பேச வந்த பாணனிடம் தலைவி இப்பாடலிலும் பாணனே... நீ தலைவனை ஒன்றும் போற்றிச் சிறப்பித்துப் பேசத் தேவையில்லை. பாட்டிசைக்கவும் தேவையில்லை. பேசாமல் போய்விடு. அழகு ஒளிவிளங்கும் நறுமலர் முல்லையில் கொடுத்த மாலை அணிந்த கரிய கூந்தலுடைய பரத்தையரே நீ புகழும் வயல்வளம் நிறைந்த மருத நிலத் தலைவன் அப்பரத்தையரிடம் கொண்டுள்ள பரிவினையும், எம்மிடம் காட்டும் இகழ்வினையும் கூறாமல் கூறி நிற்கின்றனர். ஆகவே, நீ ஏதும் பேசாமல் இங்கிருந்து போய்விடு என்று பாணனிடம் வெறுப்புடன் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ:

பயின்று–பலவாக எடுத்து விளக்கி. எல்–ஒளி. தார்–மாலை. இரும்–கரிய. வண்ணம்–தன்மை. சோர்வு–நெகிழ்வு.

கரும்பாய் இனித்த நான் சக்கையாகி விட்டேன்

9. கருங்கயத்து ஆண்கண் கழுமிய நீலம்
பெரும்புற வாளைப் பெடைகதூஉம் ஊரன்
விரும்பும் நாள்போலான் வியன்நலம் உண்டான்
கரும்பின் கோது ஆயினேம் யாம்.

விளக்கவுரை

பாணனுக்கு வாயில் மறுத்த தலைவி, தலைவன் முன்பு பழகி இன்பம் நுகர்ந்ததையும் இப்போது பரத்தையர் நேசம் விரும்பி போய் விட்டதால் சாறு பிழிந்த பின்னர் தூக்கி எறியப்படும் கரும்பின் சக்கை போலாகிவிட்ட தன் நிலையைகூறி சலித்துக் கொள்வது இப்பாடலின் பொருளாக உள்ளது.

பெரிய குளம் அதில் நிறைய பூத்த குவளைப் பூக்கள் அதைப் பெரிய முதுகு பக்கத்தை உடைய பெண் வாளை மீன்கள் பற்றி இழுக்கும் வளம் உடைய மருத நிலத் தலைவன் எம்மோடு இருந்த நாளில் இன்ப நலம் உண்டு சுகம் கண்டான். இப்போது அவன் அப்படி யில்லை பரத்தையர்பால் கொண்ட விருப்பத்தால் எம்மை விலக்கி வட்டான். முன்பு அவனுக்கு கரும்பாக இனித்த நான் இப்போது கரும்பின் சாரமற்ற சக்கை ஆகிவிட்டேன் என்ற சோகத்துடன் தலைவி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ:

கரும்–பெரிய. கயம்–குளம். ஆங்கண்–அங்கே. கழுமிய. நிறைந்த. நீலம்–குவளை மலர். புறம்–முதுகு.

கையில் நீலமலர் ஏந்திவா
தாமரை மலர் சூடிவா...

10. ஆம்பல் அணித்தழை ஆரம் துயல்வரும்
தீம்புனல் ஊரன் மகளிவள் ஆய்ந்த நறும்
தேமலர் நீலம் பிணையல் செறிமலர்த்
தாமரை தன்ஐயர் பூ.

விளக்கவுரை

தலைவியைத் தனியே சந்திக்க வரும் தலைவன் எப்படி வரவேண்டும் என்பதை உணர்த்துவதாக அமைந்த பாடல் இது.

ஆம்பல் பூக்களோடு சந்தன மரத்தின் தழைகள் சேர்த்துக் கட்டப்பட்டு அணியப் பெற்ற மாலைகள் அசைய வரும். நல்ல நீர்வளம் மிகுந்த மருத நிலத்து ஊரின் தலைவனின் மகள் என் தலைவி. நல்ல வாசத்

தேன் மலர் மாலையே இவள் தந்தையும், தமையன்மார் களும் அணிவது. ஆகவே, நீயும் கையில் நீல மலர் ஏந்தி, தாமரை மலர் மாயை சூடிவா... என்று கூறுவதாக இப் பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ:

ஆரம்-சந்தனம். துயல் வரும்-அசையும். தீம்புலை-நல்ல நீர். ஆய்ந்த-தேர்ந்த. தேமலர்-தேன் சிந்தும் நறுமலர். பிணையல்-மாலை. நெறி-நிறைந்த. ஐயர்-தந்தை, தமைவன்மார்கள்.

❑ ❑ ❑

நெய்தல்

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும்.

தலைவன் தொடர்பு சந்தேகத்திற்குறியது

1. நெய்தல் படப்பை நிறைகழித் தண்சேர்ப்பன்
கைதை சூழ்கானலுள் கண்டநாள் போலானான்
செய்த குறியும் பொய்ஆயின ஆயிழையாய்!
ஐயகொல் ஆன்றார் தொடர்பு.

விளக்கவுரை

நெய்தல் மலர்கள் பூத்து மலர்ந்துள்ள கொல்லைகள் மிகுந்த கடல் கால்வாய்கள் ஓடும் குளிர்ந்த நெய்தல் நிலத் தலைவன், தாழை மடல் விரிந்த கடற்கரை சோலையில் நாம் முதல் முதலாக பார்த்த நாளில் அவன் நமக்கு எப்படி அன்புள்ளவளா! விளங்கினானோ அதுபோல் இன்றும் இருக்கிறான் என்று நினைத்தோம். ஆனால், அவன் வருவதாகக் கூறிய இரவுக்குறி பொய்யாகப் போனதால் அன்புள்ள தலைவியே... அவன் நட்பு பெரியோர்கள் தொடர்புபோல் நீடிப்பது சந்தேகமே என்று தோழி கூறுகிறாள் இரவுகுறி கூறி வருவதாகத் சொன்ன தலைவன் குறித்த நேரத்தில் அவன் வராததால் அவன் பெரியோர்க்குள்ள இயல்பை உடையவன் அல்ல என்று தோழி நினைக்கிறாள். பெரியோர் இயல்பு என்பது குறிப்பறிந்து, குறித்த நேரத்தில் தவறாமல் வருவதாகும். தலைவன் அப்படி நடக்கவில்லை என்பதால் அவன் இயல்பு மீதே சந்தேகம் வருவது இயல்புதானே? குறித்த நேரத்தில் வராத தலைவன் எதிர்காலத்தில் தலைவியை மறந்து வேறு பெண்களிடம் வாசம் செய்யலாம். இளமை இருக்கும் வரையில் தலைவியிடம் இன்பம்

நுகர்ந்து விட்டு கைவிடலாம். இந்த ஐயப்பாடுகளை குறிப்பாக உணர்த்தவே தோழி இவ்விதம் கூறுகிறாள். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ:

நெய்தல்-நெய்தல் மலர். படம்பை-தொல்லை. நிறை-நிறைந்த. கழி-கடற் கால்வாய். தண்-குளிர்ந்த. சேர்ப்பன்-நெய்தல் நிலத் தலைவன். கைதை-தாண்டி கானல் கடற்கரைச் சோலை. ஆய-ஆய்ந்த. இழை-அணிகலன்கள். ஐய-சந்தேகத்திற்கிடமான. ஆன்றோர்-பெரியோர்.

எம் தலைவியை மனைவியாக ஏற்றுக் கொள்க

2. முத்தம் அரும்பும் முடத்தாள் முதுபுன்னை
   தத்தும் திரைதயங்கும் தண்அம் கடல்சேர்ப்ப!
   சித்திரப் பூங்கொடி அன்னாட்கு அருள்ஈயாய்
   வித்தகப் பைம்பூண் மார்பு.

விளக்கவுரை

முத்துக்கள் போல் மொட்டுகள் அரும்பும் வளைந்த அடிப்பாகம் கொண்ட முதிய புன்னை மரத்தின் மீதேறி அலைகள் பாயும் அழகிய குளிர்ந்த கடற்கரை உடை நெய்தல் நிலத் தலைவனே... சித்திரத்தில் வரைந்த ஓவியப் பாவை பூங்கொடி போன்ற என் தலைவிக்கு வேலைப் பாடமைந்த பொற்பூண் அணிந்த உன் மார்பைத் தழுவ மணம் செய்து அவளை மனைவியாக ஏற்றுக் கொள்க என்று தோழி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

தலைவியை அடிக்கடி சந்தித்து களவொழுக்கம் செய்தல் வேண்டாம். முறையாக திருமணம் செய்து

கற்பு மணம் கொள்வதே சிறந்தது. ஊரார் பழிப்பதி லிருந்தும் மற்ற இடையூறுகளிலிருந்து விடுபடவும் இதுவே சிறந்த வழி என்பது தோழி மூலமாக தலைவ னுக்கு உணர்த்தப்படுகிறது.

அ.பொ:

முத்தம்-முத்துப் போன்ற. முடத்தாள்-வளைந்த அடிமரம். முது-முதிர்ந்த. தத்தும்-தாவும். திரை-அலை. தயங்கும்-அசையும். தண்-குளிர்ச்சி. அகம்-அழகிய. சேர்ப்பன்-நெய்தல் நிலத் தலை வன். வித்தகம்-வேலைப்பாடுடைய. பைம்பூண்-பசும் பொன்னாலான பூண்.

குறித்த நேரத்தில் தலைவன் வரவில்லை

3. எறிசுறா நீள்கடல் ஓதம் உலாவ
நெறிஇறாக் கொட்கும் நிமிர்கழிச் சேர்ப்பன்
அறிவுஅறா இன்சொல் அணிஇழாய் நின்இல்
செறிவுஅறா செய்த குறி.

விளக்கவுரை

சுறா மீன்கள் அலை வீசும் நீள்கடலில் துள்ளி விளையாட, இறால் மீன்கள் திரியும் இடமாகிய நீண்ட கடல் கால்வாய்களை உடைய நெய்தல் நிலத் தலைவன் அன் அறிவை விட்டு நீங்காத அதாவது என்றும் மனதிற்கு உகந்ததான இனிய மொழி பேசும் அழகிய அணிமணிகள் புனைந்த என் தலைவியே. உன் வீட்டருகில் குறித்த இரவுக்குறி நிறைவு பெறாது பயனற்று போனது. தலைவன் குறித்த இடத்தில் குறித்த அடையாளத்துடன் தலையைக் காண வருதல் இரவுக்குறி எனப்படும். இப்படி இடமும் நேரடும் குறித்த தலைவன் வராமையை தலைவிக்கு தோழி சொல்வதாக இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

ரகசிய சந்திப்பு என்பது எப்போதும் ஆபத்தைத் தரக் கூடியது. ஊரார் பழிக்கு அஞ்சவேண்டும். இரவுக்

குறியை ஆலோசித்து தேர்ந்தெடுத்தப் பிறகும் கூட பிறர் கண்களில் படாமல் இருக்க வேண்டும். எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பது எவருக்கும் தெரியாது. குறித்த நேரத்தில் தலைவன் வரவில்லை. என்றாலும் தலைவனுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோ என்ற சந்தேகமும் தோழிக்கு வந்திருக்கலாம். இப்படி யெல்லாம் தலைவன், தலைவியை ரகசியமாக சந்திப்பதை திணைமொழி ஐம்பது தமிழ் இலக்கியத்தில் படிப்பதால் மனித சமுதாயத்திற்கு என்ன நன்மை என்ற கோணத்தில் நாம் தொடர்ந்து விளக்கவுரையை அளித்து வருகிறோம். தலைவன் நேர்மையாக இருந்தால் அவன் போற்றப்படு கிறான். நேர்மை தவறியவனாக, பரத்தையர் வசம் சிக்குபவனாக இருந்தால் தூற்றப்படுகிறான். ஒழுக்கத் தின் அடிப்படையிலேயே மனிதனுக்கு பெருமை, சிறுமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, மனிதன் எந்த துறையில் இருந்தாலும் நேர்மையாக ஒழுக்கத்துடன் இருந்தால் தான் பெருமை. காதல் விஷயத்திலும் நேர்மை வேண்டும். இந்த இலக்கியத்தில் நேர்மையும், அன்பும் பிரதானமாக போற்றப்படுகிறது. இந்த இரண்டு நற்குணங்களும் நம்மை தெய்வீகத்திற்கு அழைத்துச செய்யக் கூடியவை திணைமொழி ஐம்பதில் கூறப்பட் டிருக்கும். வர்ணனைகள் நம் மனதிற்கும், உடலுக்கும் ஓய்வைத் தருகின்றன. உறக்கத்தில்கூட அத்தகைய ஓய்வை நாம் பெறுவதில்லை. ஆகவே, தமிழ் இலக்கியங்களை படிப்பது நம் உடல் நலனை சிறப்பாக்குகிறது என்கிற ரகசியத்தையும் நீங்கள் அளித்தல் வேண்டும். இச்சிந்தனை களைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

எறி–துள்ளும். ஓதம்–அலை. நெறி–இடம். கொட்கும்–திரியும். திமிர்–நீண்ட. சுழீ–கடல் கால்வாய். சேர்ப்பன்–நெய்தல் நிலத் தலைவன். இல்–வீடு. செறிவு–நிறை.

களவொழுக்கம் வேண்டாம்...!
காதல் மணம் புரிக...!

4. இனமீன் இருங்கழி ஓதம் உலாவ
மணிநீர் பரக்கும் இறைவ! தகுமோ
குணநீர்மை குன்றாக கொடிஅன்னாள் பக்கம்
நினைநீர்மை இல்லா ஒழிவு.

விளக்கவுரை

மீன்கள் கூட்டம் உலவும் நீண்ட கடற்கரைக் கால்வாய்களில் அலைகள் வந்து மோத நீலநிறமணி போன்ற நிறமுடைய கடல் நீர் பரவி 'நிற்கும் கடற் கரைத் துறையுடைய தலைவனே... நல்ல குணமுடைய பண்பில் குறையாத பூங்கொடி போன்ற எம் தலைவி யின்பால் நினைவில்லாமல் களவொழுக்கம் செய்வது உங்கள் புகழுக்கு உகந்தது ஆகாது. ஆகவே, களவொழுக்கம் வேண்டாம். காதல் மணம் புரிய நினைந்திடுக என்று தலைவனை தோழி கேட்பதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

களவொழுக்கம் புகழுக்கு களங்கம் கற்பிக்கும் என்பதை இப்பாடலிலும் குறிப்பாக தோழி உணர்த்துகிறாள். ஒழுக்கத்தின் மேன்மை ஒவ்வொரு பாடலிலும் வலியுறுத்தப்படுகிறது. அதேசமயம் இயற்கை வர்ணனைகள் நம் மனதை புது உலகிற்கு அழைத்துச் செல்கின்றன. தமிழ் இலக்கியங்களைப் படிப்பவர்கள் புதிய உலகில் நுழைகிறார்கள் என்பதை அனுபவமே எடுத்துக் கூறும் நரகமாகிய இந்த உலகில் ஒரு மனிதனை சிறிது நேரம் மகிழ்ச்சியாக, அமைதியாக வாழ வைக்க நல்ல பழக்கம் உதவுமானால் அதை மனமார பாராட்டியே ஆகவேண்டும். அந்த வகையில் புலவர் தந்துள்ள திணைமொழி ஐம்பது நம்முடைய உடல், மனம் ஆகியவற்றிற்கு ஒய்வு தந்து புத்துணர்வு

தருகிறது என்பதை வாசகர்கள் அறிய வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

இனம்-கூட்டம். இரும்கழி-பெரிய கடல் கால்வாய். ஓதம்-அலை. மணி-நீலமணி. பரக்கும்-பரவியிருக்கும். குண நீர்மை-நல்லியல்பு. குன்றா-குறைவு படாத. கொடி அன்னாள்-கொடி போன்றவள். நினைநீர்மை-நினைக்கும் தன்மை. ஒழிவு-இல்லாது போவது.

காதல் நோய்க்கு மருந்து திருமணமே...

5. கடல் கொழித்து இட்ட கதிர்மணி முத்தம்
படமணி அல்குல் பரதர் மகளிர்
தொடலை சேர்த்து ஆடும்துறைவ! என்தோழி-
உடலுள் உறுநோய் உரைத்து.

விளக்கவுரை

கடலலைகள் கொண்டு வந்து கரையில் கொட்டிய ஒளி வீசும் மணி முத்துக்களை, பாம்பின் படம் போன்ற அல்குல் உடைய பரதவர் குலப் பெண்கள் மாலையாகத் தொடுத்து விளையாடும் கடல் துறைகளையுடைய நெய்தல் நிலத் தலைவனே... என்தலைவி தனக்குண்டான காதல் நோய் பற்றி என்னிடம் கூறி வருந்துகிறாள். அவனுக்கு வந்த நோய் என்னவென்று தெரியாதா உனக்கு...? அது காதல் நோய்தான். அதற்கு மருந்து திருமணம் தான். ஆகவே, விரைந்து வந்து அவளை திருமணம் செய்து கொண்டு அவளை இந்நோய் துன்பத்தில் இருந்து காப்பாற்றுவாயாக என்ற தோழி தலைவனிடம் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள் ளது.

திருமணம் தான் இல்லலற தர்மம் என்பதை திணைமொழி ஐம்பது அடிக்கடி சுட்டிக்காட்டுகிறது. அதேசமயம் களவொழுக்கத்தையும் விவரித்து கூறுகிறது. களவொழுக்கத்தால் களங்கம், ஆபத்துக்கள் வரும். காதல் மணத்தால் மகிழ்ச்சியும், அமைதியும் கிடைக்கும். அமுதம் அருகில் இருக்கும்போது சாக்கடையை எவரும் விரும்பமாட்டார்கள். அதேபோல் அமுதம் கிடைக்கவில்லை என்றாலும்கூட அதற்காக சாக்கடையில் விழவேண்டும் என்பதுமில்லை. நேர்மையான முறையில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற இல்லற தர்மத்தை மதித்து காதல் திருமணம் புரிவதே தமிழர் பண்பாடு. அதேசமயம் தலைவன் பரத்தையர்பால் சென்று புகழை இழப்பதையும் தமிழ் இலக்கியம் சுட்டிக்காட்டுகிறது.

பரத்தையிடம் தலைவன் சென்றான். தலைவியை மறந்தான் என்று திரும்ப, திரும்ப கூறுவதெல்லாம் நாமும் அவ்வாறு செய்யபடலாம் என்று அர்த்தம் அல்ல. தீயஒழுக்கத்தில் ஈடுபட்டார் ஊரரார் பழிப்பார்கள் புகழ் விலகும். பெண்கள் தூற்றுவார்கள் என்ற படிப்பினை உணர்த்தப்படுகிறது. மேலும் ஐந்திணை ஐம்பதில் புலவர் கூறியிருக்கும் வர்ணனைகள் நம்மை புதிய உலகத்திற்கு அழைத்து செல்கிறது. அலைபாயும் மனத்தை ஒருநிலைப்படுத்தி அமைதியாக்குகிறது. மனித குலத்தவர் பட்ட காயங்களுக்கு அருமருந்தாக தமிழ் இலக்கியங்கள் திகழ்கின்றன. திணைமொழி ஐம்பது இலக்கியம் அப்பணிணை செய்கிறது. இச் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

கொழித்த–தெரிந்த. கதிர்–ஒளி. படம்–பாம்புப் படம். அங்குல்–மறைவிடம். பாதர்–நெய்தல் நிலமக்கள். தொடலை–மாயை. உறு நோய்–அடைந்த நோய். உரைத்து–சொல்லி.

"மனநோய்க்கு மருந்து திருமணமே"

6. முருகியல் கானல் அகன்கரை ஆங்கண்
குருகினம் ஆர்க்கும் கொடுங்கழிச் சேர்ப்ப!
மருவி வரலுற வேண்டும் என்தோழி
உருவழி உள்நோய் கெட.

விளக்கவுரை

அழகு நிறைந்த அகன்ற கடற்கரைச் சோலைகளில் பறவைகள் கூட்டம் ஆரவார முழக்கமிடும் வளைந்த கடல் கால்வாய்களை உடைய நெய்தல் நிலத் தலைவனே... நீ என் தலைவியை விரைந்து திருமணம் முடிக்க வரவேண்டும். இல்லையென்றால் என் தலைவி உன் நினைவால் உருக்குலைந்து போய்விடுவாள். எனவே, நீ வருக. தலைவியை மணம் முடித்துக் கொள்க என்ற தலைவனிடம் தோழி கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

உடல் பசியைவிட காமப்பசி எத்துணை பொல்லா தது என்பதை ஒவ்வொரு பாடலிலும் நாம் அறிகிறோம். காதல் நோய் என்பது உடல்... மனம்... புத்தி... சித்தம் எல்லாவற்றையும் பலவீனப்படுத்தக் கூடியது. பலவீனம் அடைந்த ஒரு ஆணோ, பெண்ணோ எந்த செயலையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது. அதனால்தான் காதல் திருமணத்தை உரிய காலத்தில் முடித்து வைத்தார்கள் நம் தமிழ் முன்னோர்கள். ஆனால், இன்றைய காலகட்டத்தில் உரிய நேரத்தில் திருமணம் நடைபெறுவதில்லை களவு ஒழுக்கத்திற்கு வாய்ப்புகள் அதிகமாகி விட்டன. இதனால், தமிழர் பண்பாடு, நாகரிகம் ஆகியவை கேள்விக்குறியாக்கப்பட்டு வருகிறது.

இயற்கையாக தோன்றும் காதல் உணர்ச்சிகளுக்கு மருந்து திருமணம்தான். அத்திருமணத்தை உரிய

காலத்தில் முடித்துக் கொண்டு மனித சமுதாயத்திற்கு பயன்படும் காரியங்களை சாதனைகளாக ஆக்க வேண்டும். சிற்றின்ப வாழ்க்கையிலே மூழ்கி விடக் கூடாது. சிற்றின்பம் என்பது வாழ்க்கையில் ஒரு பகுதி அவ்வளவுதான். தோழி தலைவனுக்கு கூறும் அறிவுரை இப்போது வாழும் சமுதாயத்திற்கு கூறப்பட்ட அறிவுரையாகவே கொள்ளவேண்டும். களவொழுக்கம் வேண்டாம். காதல் மணம் புரியுங்கள். உரிய காலத்தில் திருமணம் நடந்தால் எந்த பழியும் வராது. வாழ்க்கை ஆனந்த பயணமாக மாறும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

முருகியல்-அழகு நிறைந்த. கானல்-கடற்கரை சோலை. அகன்-அகன்ற. ஆங்கண்-அங்கே. குருகினம்-பறவைக் கூட்டம். ஆர்க்கும்-ஒலி எழுப்பும். கொடும்-வளைந்த. கழி-கடல் கால்வாய். சேர்ப்பன்-நெய்தல் நிலத் தலைவன். மருவ-மணம் புரிய. உரு-உருவம். அழி-கெடுக்கும். கெட-நீங்க.

தலைவன் என்னைப் பிரிந்து சென்று விடுவானோ தோழி...?

7. அணிபூங் கழிக்கானல் அற்றைநாள் போலான்
மணிஎழில் மேனிமலர் பசப்பு ஊர்த்
துணிகடல் சேர்ப்பன் துறந்தான்கொல் தோழி!
தணியும் என்மென் தோள் வளை.

விளக்கவுரை

அழகிய மலர்கள் பூத்துக் குலுங்கும் கடல் நீர்க் கால்வாய்களோடு கூடிய கடற்கரை சோலையில் அன்று கூடி மகிழ்ந்தது போல இல்லாது அழகிய மணி போன்ற என் உடம்பில் பீர்க்கம் பூப் போன்ற பசலைப் படரத் தெளிந்த நீருடைய கடல் துறைகளையுடைய

நெய்தல் நிலத் தலைவன் என்னை மறந்துவிடுவானோ... கைவிட்டுவிடுவானோ... பிரிவுத் துன்பத்தில் நான் மூழ்கி விடுவேனோ...? என்பது போன்ற துயர மொழிகளை தலைவி தோழியிடம் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

தலைவன் மேல் ஏற்பட்ட சந்தேகத்தால் தலைவி தன் வேதனையை வெளிப்படுத்துகிறாள். திணைமொழி ஐம்பது நூலில் தலைவன் பிரிவதால் தலைவிக்கு காதல் நோய் வருகிறது. தலைவன் பரத்தையர் வசம் சென்றதால் தலைவிக்கு வேதனை வருகிறது. இரவுக் குறிப்படி தலைவன் வராததால் சந்தேகம் வருகிறது. இளமை அழிந்ததால் தலைவன் தன்னை வெறுக்கிறான் என்ற துயரம் இப்படி தலைவன், தலைவி ஆகியோரிடையே தோன்றும் ஊடல்... கூடல் ஆகியவற்றை இவ்விலக்கியம் கூறி வருகிறது. இந்த நிகழ்வுகளை அறிவதால் மனித குலத்திற்கு என்ன நன்மை? என்ற வினாவினை எழுப்பி நாமும் தொடர்ந்து விளக்கவுரையில் கருத்துகளை கூறி வருகிறோம்.

திரும்பவும் அதனை நினைவுப்படுத்துகிறோம். நம்முடைய வாழ்க்கைப் பயணத்தில் நாம் செய்யும் செயல்கள், படிக்கும் கல்வி போன்ற அனைத்தும் நமக்கு ஏதேனும் நன்மையைத் தருவதாக இருக்க வேண்டும். என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அப்படியென்றால் திணைமொழி ஐம்பது என்ற தமிழ் இலக்கியத்தால் மனித சமுதாயத்திற்கு என்ன நன்மை? தலைவன்... தலைவி யிடையே தோன்றும் உண்மையான அன்பு, அதாவது காதல் வேகம் அந்த சக்தி வேறு ஒரு மகத்தான செயலுக்கு திரும்பி விடப்பட்டால் மகத்தான வெற்றியைப் பெற்றுத் தரும் என்பது ஒரு நன்மை.

இதைத்தான் பிரம்மச்சத்தியம் காத்தல் என்று சான்றோர்கள் கூறியிருக்கிறார்கள். பெண்களிடம் ஏற்படும் ஆசையை காம சக்தியை அடக்கி பிரம்மச்சரியம் காப்பவர்களுக்கு மகத்தான சக்தி தோன்றுகிறது. எல்லா கலைகளையும், கற்கும் திறன் வருகிறது. எல்லா நுட்பங்களையும் புரிந்து கொள்ளும் ஆற்றல் வருகிறது என்றும், சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய அரும்பெரும் கலைகள் எல்லாம் அழிந்து போனதற்கு இந்த பிரம்மச்சர்ய முறையை கடைபிடிக்காததே காரணம் என்று அனைவருக்கும் தெரியும்.

ஆகவே, இல்லற வாழ்வு வாழுங்கள். காதல் மணம் புரியுங்கள். களவொழுக்கம் வேண்டாம். பரத்தையர் வீட்டிற்கு சென்று நிற்க வேண்டாம். அளவோடு இன்பம் நுகர்ந்து பிரம்மச்சரியத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள். திணைமொழி ஐம்பதில் கூறப்பட்டிருக்கும் அற்புதமான இயற்கை வர்ணனைகளை ரசித்து மனத்திற்கு பரிபூரண ஓய்வு வழங்குங்கள். மனம் ஓய்வு பெற்றால் உடலும் ஓய்வு பெறும். மனமும், உடலும் உறுதியாக இருந்தால் எப்படிப்பட்ட மகத்தான காரியங்களிலும் வெற்றி பெறலாம். இதை மறவாதீர்கள். திணைமொழி ஐம்பது தமிழ் இலக்கியத்தால் நாம் பெறும் நன்மை இவைகளாக இருக்கட்டும். இச்சிந்தனை களைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

அணி–அழகு. கழி–கடல் நீர் கால்வாய். கானல்–கடற்கரை சோலை. மணி–ஒளி. எழில்–அழகு. மேனி–உடம்பு. மலர்–பீர்க்கம் (பூ). ஊர–படர. துணி–தெளிந்த. சேர்ப்பன்–நெய்தல் நிலத் தலைவன். தணியும்–மெலியும்.

தலைவன் தேரில் வருவான் கவலைப்படாதே

8. **கறங்கு மணி நெடுந்தேர் கண்வாள் அறுப்பப்**
பிறங்கு மணல்மேல் அலவன் பரப்ப
வறம்கூர் கடுங்கதிர் வல்விரைந்து நீங்க
நிறம் கூரும் மாலை வரும்.

விளக்கவுரை

தேரில் கட்டிய மணிகள் ஒலிக்க, கடற்கரை மணலில் நண்டுகள் திரிய, வெப்பம் மிக்க சூரியக் கதிர்கள் கண் ஒலி மங்கச் செய்யும் உச்சிப் பொழுது நீங்கி வரும் அழகிய பொன் அந்தி மாலைப்பொழுதில் தலைவர் தேர்வரும். கவலைப்படாதே என்று தலைவிக்கு தோழி ஆறுதல் சொல்வதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

காதல்... மானம்... வீரம் ஆகிய மூன்றும் தமிழரின் அடையாளங்கள். இதில் காதல் என்ற தலைப்பில் செய்திகளை புலவர் பலவாறாக அளித்துள்ளார். சொன்ன செய்திகளே திரும்ப திரும்ப வருகின்றன. வர்ணனைகள் பலவாறாக வருகின்றன. மனிதப் பிறவி எடுத்த ஆண், பெண் ஆகிய இருசாராருக்கும் இந்த காதல் நோய் வந்தே தீரும். இதில் எவரும் விதிவிலக்காக இருக்க முடியாது. முற்றும் துறந்த முனிவர்கூட இந்த காம மயக்கத்திற்கு ஆளாகி பிறகு விடுபட்டவர்கள்தான். ஆகவே, காதலின் நன்மை, தீமைகளை நாம் அறியத்தான் வேண்டும். காதல் மணம் தவறில்லை. களவொழுக்கத்தில் ஈடுபட்டு தலைவிக்கு துன்பம் தரும் செயலை செய்யக் கூடாது.

திணைமொழி ஐம்பது இலக்கியம் முழுவதும் இந்த அறிவுரை குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளது. இதை வெறும் தலைவன், தலைவி நிகழ்வுகளாக மட்டும் பார்க்காமல் ஒழுக்கத்துடன் காதல் மணம்

புரிய வேண்டும் என்ற அறநெறியை உணர்ந்து அதனை வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும். எந்த இலக்கிய மாக இருந்தாலும் மனித குலத்திற்கு ஏதேனும் ஒரு நன்மையைத் தரவேண்டும். அந்த வகையில் புலவர் கண்ணன் சேர்ந்தனார் அவர்கள் இயற்கை வர்ணனைகள் நம் மனதிற்கு பரிபூரண ஓய்வையும், மகிழ்ச்சியும் தரும் வகையில் தரப்பட்டுள்ளன. திரும்ப, திரும்ப விளக்க வுரையில் நாம் நினைவுபடுத்தி வருகிறோம். உடல், மனம் ஆகியவற்றிற்கு ஓய்வு கொடுப்பது தூக்கத்தினால் ஆகாது.

இயற்கை வர்ணனைகளில் மூழ்குவது, தெய்வச் சிந்தனைகளில் மூழ்குவது ஆகியவை தியானத்தைப் போல வல்லமை வாய்ந்தது என்பைத வாசகர்களுக்கு நினைவுப்படுத்துகிறோம். திணைமொழி ஐம்பது இலக்கியம் ஆண், பெண் காதல் விஷயங்களை கூறுவது என்று மட்டும் கருதாமல் காதல் மணம் புரிந்து நேர்மையாக இல்லற நெறி காக்க வேண்டும் என்பதை உணர்த்தும் காவியமாக கருதவேண்டும். இச்சிந்தனை களைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ:

கறங்கு-ஒலிக்கும். வாள்-ஒளி. அறுப்ப-வருத்த. பிறங்கு-விளங்கும். அலவன்-நண்டு. வெறம்கவர்-வெப்பம் உடைய. வல்-விளாவு. நிறம்கவர்-அழகு பொருந்திய.

இவள் என்ன மயிலா...? மானுடப் பெண்ணா?

9. மயில்கொல் மடவார்கொல் மாநீர்த் திரையுள்
பயில்வதோர் தெய்வம்கொல்! கேளிர்! குயில்பயிரும்
கன்னி இளஞாழல் பூம்பொழில் நோக்கிய
கண்ணின் வருந்தும் என்நெஞ்சு.

விளக்கவுரை

இவள் என்ன மயிலா...? இல்லை மானுடப் பெண்ணா...? மிகப் பெரிய கடலுள் வாழ்கின்ற தெய்வமா...? என் நண்பனே... குயில் கூவும் இனைய கோங்க மரங்கள் நிறைந்த பூமலர்ச் சோலையில் அவளைப் பார்த்ததிலிருந்து என்னிரு கண்களை விட மனம்தான் அவளை நினைத்து மிகவும் துன்பப்படுகிறது என்று தலைவியின் அழகு நலத்தைத் தோழனிடம் தலைவன் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ:

விரைஇ–கலந்து, புறவு–கொல்லை. முன்றில்–இல்முனி, முற்றம். திரை–அலை. சேர்ப்பன்–நெய்தல் நிலத் தலைவன். அமர்–தங்கும்.

திருமணம் பேச
இன்றாவது வருவானா தோழி...?

10. பவழமும் முத்தும் பளிங்கும் விரைஇப்
புகழக் கொணர்ந்து புறவு அடுக்கும் முன்றில்
தவழ்திரை சேர்ப்பன் வருவான்கொல் தோழி
திகழும் திருஅமர் மார்பு.

விளக்கவுரை

பவழத்தையும், முத்து மணிகளையும், பளிங்கு கற்களையும், கலந்து வாரிக் கொண்டு வந்து பார்த்தவர் புகழ்ந்து போற்றும்படி கொல்லையில் அடுக்கும் வீடுகளின், முற்றம் வரை வந்து அலைக் கரங்கள் தவழும் நெய்தல் நிலத் தலைவன் அவன். பெண்களுக்கு மகிழ்ச்சியை சேர்க்கும் மண நிகழ்வான திருமணம் பற்றி பேச இன்றாவது தலைவன் வருவானா...? என்று

தோழியிடம் தலைவி கேட்பதாக இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

பெண்களுக்கு திருமண செய்திதான் மகிழ்ச்சி தரக்கூடியது. களவொழுக்கம் அல்ல என்பது குறிப்பாக உணர்த்தப்படுகிறது.

அ.பொ:

விரைஇ-கலந்து. புறவு-கொல்லை. முன்றில்-இல்முன், முற்றம். திரை-அலை. சேர்ப்பன்-நெய்தல் நிலத் தலைவன். அமர்-தங்கும்.

❒ ❒ ❒

திருமதி.அம்சவேணி பெரியண்ணன்

“திருக்குறளை மக்களிடம் பரவலாக எடுத்துச் செல்வதில் புதிய முறையைக் கையாண்டவர். திருக்குறளை ஓலைச்சுவடிபோல் பதிப்பித்தும் திருமணப் பரிசாகவும் நண்பர்களுக்கு அன்பளிப்பாக வழங்கும் பழக்கத்தை அறிமுகப்படுத்தியவர். வாழ்க்கைத் துணைநலம் என்ற வள்ளுவர் பெருந்தகையின் கருத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன்.”

- சுதந்திரப் போராளி தோழர்.இரா.நல்லகண்ணு

மூத்த தலைவர், தேசியக் குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

“நூல்களுக்காக வாழ்ந்தவர் இப்போது நூலாகவே வாழ்கிறார்! அந்தக் காலத்தில் பாடப்புத்தகங்களைத் தாண்டி பல்வேறு துறைகள் சார்ந்த புத்தகங்களை அச்சிட்டு, அனைவரையும் படிக்க வைத்தார். ஒரு பெண்மணி என்றால் நம்ப முடிகிறதா? அந்த சாதனையைப் படைத்தவர்தான் அம்சவேணி பெரியண்ணன். சாதனைப் பெண்மணி அம்சவேணி பெரியண்ணன் பல விஷயங்களில் முதல்வர்.”

- மருத்துவர் அன்புமணி இராமதாஸ்

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர்

“பதிப்பகத்துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன். ஒரு பெண் பதிப்பாளராக 1000 நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது வியக்கத்தக்க ஒன்றாகும். பதிப்பகத் துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் வனிதா பதிப்பகம் திருமதி.அம்சவேணி பெரியண்ணன் அவர்கள். பெண்ணுலகின் அணிகலனாக ஒளிரும் அம்மையாருக்கு நன்றி!”

- கி.வீரமணி

தலைவர், திராவிடர் கழகம்

“நான் எழுதிய மக்களிசைப் பாடல்கள், பழமொழிக் கதைகள், சிறுவர் பாடல்கள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு என்னை எழுத்தாளராக உயர்த்தியவர். என் மனைவி அனிதா குப்புசாமி அவர்களுடன் ஏற்பட்ட நெருங்கிய பழக்கத்தில் அவர்கள் செய்கின்ற சமையல்களைப் பார்த்து ‘ஏன் நீங்கள் சமையல் நூல்கள் எழுதக் கூடாது’ எனக் கேட்டு உயர்தரமிகு சைவ சமையல், டிபன் சமையல், இனிப்பு வகைகள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு பெருமைப்படுத்தியவர். பதிப்புத்துறையில் இவர் செய்த சாதனைகள் எண்ணிலடங்கா.”

- கலைமாமணி முனைவர் புஷ்பவனம் குப்புசாமி,

கிராமிய இசைக் கலைஞர்.